

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பாலம்

இலக்கிய மாத இதழ்
டிசம்பர் 1990

32

ஆசிரியர் :
இரா. திரவியம்

ஆசிரியர் குழு :
சமந்தா
இளம்பிறை
குமார்

தனியிதழ் ரூ. 3.00
ஆண்டுச்சந்தா ரூ.30.00
அரையாண்டுச்சந்தா ரூ. 15.00

தொடர்பு முகவரி :
நிர்வாகி
பாலம்
25, அருணாசலபுரம்
மெயின் ரோடு
அடையாறு சென்னை-20.

நிர்வாக ஆசிரியர் :
அதியமான்


## இந்து மதவெறிப் பயங்கரவாதம்

அக்டோபர் 30 இல், அயோத்தியில் பாபர் மசூதி உள்ள இடத்தில் ராமருக்கு ஆலயம் அமைப்பது என்னும் வெறியுடன், விசுவ இந்து பரிஷத், ஆர். எஸ். எஸ்., பாரதீய ஜனதா கட்சி ஆகியவை 'கர்சேவா' மதவெறிச் செயலில் ஈடுபட்டனர். அலை அலையாய் வந்த இந்து மதவெறியர்களும், பண்டாரங்களும் ஊரடங்கு, இராணுவ ரோந்து அனைத்தையும் மீறி, அயோத்தியினுள் நுழைந்து அரசு அதிகாரிகளின் துணையுடன் மசூதியின் குவிமாடங்களை இடித்து சிதைத்து, தங்களுடைய காவிக் கொடியை ஏற்றினர்.

இதைத் தொடர்ந்து, அரசு அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கான முயற்சியில் இந்துமத பாரதீய ஜனதா கட்சி ''எந்த சமரசத்திற்கும் இடமில்லாது ராமருக்கு ஆலயம் அமைத்தே தீருவோம்'' என அறிவித்துள்ளது. தங்களுடைய பலத்தை மத அடிப்படையில் அதிகரித்துக் கொள்வதற்காக மத மோதல்களை இந்தியா முழுவதும் விதைத்து வருகிறது. பாரதீய ஜனதா கட்சியின் குண்டர்படையான பஜ்ராங் தள் ஆயுத பாணிகளாக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே ஆயுதபாணி களாக உள்ள ஆர். எஸ். எஸ்., சிவசேனா போன்ற அமைப்புகளுடன் இணைந்து இவர்கள் பகீரங்கமாக வன்முறையில் ஈடுபடுவது மதத்திற்காகவும், ராமருக்காகவும் என நியாயப்படுத்தப்படுகிறது.

மக்களின் உணர்வுகளை எளிதாக தட்டியெழுப்பக் கூடிய மத விடயங்களை கையில் எடுத்துள்ள இந்து மத வெறியர்கள், தங்களுடைய அகண்ட இந்து ராஷ்டிரத்துக் கான (இதில் பர்மா, பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, வங்க தேசம் ஆகியவை அடங்கும்) கோரிக்கையையும் மறைத்தே வைத்துள்ளனர். இவர்கள் ராமருக்கு கோயிலை கட்டுவதோடு மட்டும் நிற்கக் கூடியவர்களல்லர் என்பதை நன்கு உணரலாம். இவர்களுடைய நோக்கம் முழுவதுமே,அரசு அதிகாரத்தைக்கைப்பற்றி தென்கிழக்கு ஆசியாவில் 'ஒரு பரந்த இந்து சாம்ராஜ்யத்தை' நிறுவு வதிலேயே தங்கியுள்ளது.

உ.பி., குஜராத், ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் கலவரம் கொழுந்துவிட்டு எரிகிறது. இதுவரையிலும் 2000க்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கக் கூடும் என கருதப்படுகிறது. மனிதாபி மானம் என்பது மதவெறியர்களிடம் மரணமடைந்து விட்டது.

இதற்கிடையே, ''அயோத்தியில், ராமர் பிறந்தார், 'அவருக்கு கோயில் இருந்தது'' என்று அகழ்வாராய்ச்சி முடிவுகள் சிலவற்றையும், வரலாற்று நிகழ்வுகள் சில வற்றையும் அவசர அவசரமாய் வெளியிட்டு வரு கின்றனர். இவ்வளவு ஆதாரங்களைக் காட்டும் இவர்கள் நீதிமன்றத்தின் முடிவுகளை ஏற்க மறுப்பதில் இருந்தே இவர்கள் காட்டும் ஆதாரங்களின் உண்மையை உணர முடிகிறது.

வன்முறை என்பதையே வழிமுறையாகக் கொண் டுள்ள மதவெறி அமைப்புகளை இனங் காண்பதும், அவர்களை புறக்கணிப்பதும் இன்று மக்கள்முன் உள்ள முக்கிய வரலாற்றுத் தேவையாகும். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஈழச்செய்திகள்

# ஈழச் செய்திகள்

### வளைகுடாப் பிரச்சனையின் விளைவு

வளைகுடா நெருக்கடியால் இலங்கைக்கு 10 கோடி டாலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அரசு அதிகாரிகள் கூறினர். வரும் ஆண்டில் இது இரட்டிப்பாகும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். வளைகுடா நெருக்கடி காரணமாக தேயிலை ஏற்றுமதி குறைந்தது. இராக், குவைத் ஆகிய நாடுகளில் வேலை செய்த இலங்கையரிடமிருந்து பணவரவு நின்று போனது. எண்ணெய் இறக்குமதிச் செலவு அதிகரித்தது.

ஆறு மாதங்களாக வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் சண்டை பற்றி பிரதமர் டி. பி. விஜயதுங்க கருத்துத் தெரிவிக்கையில், "இந்தச் சண்டையின் விளைவாக பாதுகாப்புச் செலவினங்களுக்கு 741.40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது அதைவிட அப்பகுதியில் உள்ள அகதிகளை பராமரிப்பதற்கென்று மேலும் 150 கோடி ரூபாய் செலவிட வேண்டியதாயிற்று. நடப்பு நிதியாண்டின் வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்ட பற்றாக்குறை 5173.70 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. இதில் 2979.40 கோடி ரூபாயை வெளிநாட்டுக்கடன், நிதி உதவியைக் கொண்டு சரிக்கட்ட முடியும். மீதிக்கு உள்நாட்டு ஆதாரங்களைத்தான் நம்பியிருக்க வேண்டியுள்ளது" என்றார் (தினமணி, 21—11—90)

### இராணுவ மயமாக்கல்

மன்னார் மாவட்ட பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கென புதிதாக உருவாக்கப்படும் துணை நிலை காவல்படைக்கு தமிழ், முஸ்லீம், சிங்கள வாலிபர்களில் 2000 பேரைச் சேர்த்துக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளது என வட கிழக்குப்பிராந்திய இராணுவத்தளபதி டென்சில் கொப்பேகடுவ மன்னாரில் செய்தியாளரிடம் கூறினார். (தினமணி, 22—11—90)

### மாங்குளம் முகாம்தாக்குதல்

வட இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளம் இராணுவ முகாமை இரண்டு நாள் கடுமையான சண்டைக்குப் பின் கைப்பற்றிவிட்டதாக பாரிஸ்நகரில் எல்.டி.டி.ஈ. அலுவலகம் தெரிவித்து. இலங்கை விமானப் படையினர் குண்டுவீச்சுக் காரணமாக அந்தப் பகுதியே நாசமாகிவிட்டதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (தினமணி, 26—11—90)

### திருச்சியில் புலிகள் கைது

நேற்று 500 பேர் அடங்கிய போலீஸ் பட்டாளம், திருச்சி தில்லை நகர்ப் பகுதியை அதிகாலை 3 மணிக்குச் சுற்றி வளைத்தனர். இந்த 500 பேரில் 40 பேர் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்தவர்கள், இவர்கள் ஏ. கே. 47 ரக இயந்திரத் துப்பாக்கியுடன் வந்திருந்தனர், பலப்பிரயோகம் எதுவுமின்றி அங்கு ஒரு வீட்டில் தங்கியிருந்த 10 புலிகளை சரணடையுமாறு மூத்த போலீஸ் அதிகாரிகள் பார்த்துக் கொண்டனர் யாழ்ப்பாணத்தில் காயம் அடையும் புலிகளுக்கு திருச்சியில் சிகிச்சை தருவதற்காகத்தான், தாங்கள் இங்கே தங்கியிருப்பதாக புலிகள் தெரிவித்தனராம். (தினமணி, 1—12—90)

### போராளிகள் முகாம் இல்லை

ராமநாதபுரத்திலிருந்து பட்டுக்கோட்டை வரை சென்று நேரடியாகப் பார்த்ததில் தமிழகக் கடற்கரையை யொட்டியுள்ள பகுதிகளில் விடுதலைப்புலிகளோ மற்ற போராளிக் குழுக்களோ முகாம்கள் அமைத்திருப்பதற்கான அறிகுறிகள் எங்கும் தென்படவில்லை. ஆனால் போராளிகள் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் கடற்கரைப் பகுதிகளுக்கு அடிக்கடி படகுகளில் வந்து டீசல், பெட்ரோல், மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியவாசியப்பொருட்களை வாங்கிச் செல்கின்றனர் என்றும், இங்கு வரும் போராளிகள் ஆயுதங்களுடன் உலவுவதையோ, யாரையும் மிரட்டியதையோ பார்க்கவில்லை என்றும் பல இடங்களில் சந்தித்த மக்கள் ஒரே மாதிரியான பதிலையே அளித்தனர்.

தமிழ் நாட்டில் புலிகள் முகாம் எங்கும் இல்லை என தமிழக அரசு கூறிவருகிறது. ஆனால் இராமநாதபுரம் மாவட்ட தொண்டி அருகே காரங்காடு என்னும் கடலோரக் கிராமத்தில் புலிகள் முகாம் அமைத்துள்ளனர் என சில தினங்களுக்கு முன்பு பத்திரிக்கையில் செய்தி வெளியானது. இதையடுத்து உண்மை நிலையை அறிய தமிழ்நாடு சட்டம்—ஒழுங்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராஜ்மோகன் பத்திரிகையாளர்களை அப்பகுதிக்கு அழைத்துச் சென்று காட்டினார். (தினமணி, 3—12—90)

### சமரச முயற்சி

இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் நிலவும் பிரச்சனைகளுக்குத் தீர்வாக, இந்திய அரசின் ஆதரவுடன் வடகிழக்கில் மாகாணக் கவுன்சில் நிறுவப்படுமானால் அதனை தமிழீழ விடுதலைப்புலிகள் ஆதரிக்கத் தயாராக இருப்பதாக, இலங்கையில் 'த ஐலண்ட்' தலைப்பு செய்தி வெளியிட்டுள்ளது. அருளர் என்ற மத்தியஸ்தர் மூலம் இலங்கை அரசுடன் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என அச்செய்தி கூறியது. (தினமணி, 3—12—90)

### மீண்டும் பேச்சுவார்த்தை

ஈழப் புலிகளுடன் லண்டனில் இலங்கை, அரசு பேச்சு நடத்தி வருவதாக வெளியான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்தியை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின மறுத்துவிட்டார், அத்தகைய பேச்சுவார்த்தை எதுவும் கிடையாது என்றார். ஆயுதங்களை ஒப்படைக்காவிட்டால்போராளிகளை அடியோடு ஒழித்துக்கட்டி விடுவோம் என அவர் மிரட்டி யுள்ளார். ஈழப் புலிகளுடனான மோதலில் இலங்கை இராணுவத்துக்கு சில பின்னடைவு கள் இருந்தன என்றாலும் அவை சமாளிக்கப் பட்டு விடக் கூடியவை என்றார். (தினமணி, 5—12—90)

**இராணுவத்தை அனுப்புவது!**

தமிழக கடலோரப் பகுதிகளில் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கை குறித்து தனது கவலையை மத்திய அரசு தெரிவித்துள்ளது. உடனடியாகப்போராளிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க நடவடிக்கை எடுக்கும்படியும் தமிழக அரசை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தேவைப்பட்டால் ராணுவத்தை அனுப்பவும் மத்திய அரசு தயங்காது என்று மத்திய உள் துறை இணை அமைச்சர் சுபோத் காந்த் சகாய் கூறினார். (தினமணி, 16 12—90)

**வாக்கெடுப்பு தள்ளி வைப்பு**

1991 ஜனவரி 19ஆம் தேதி நடைபெறுவ தாக இருந்த வடக்கு—கிழக்கு மாகாண இணைப்பு பற்றி மக்கள் கருத்தறியும் வாக் கெடுப்பு, 1991 ஆகஸ்டு 22ம் தேதிக்கு தள்ளி வைப்பதாக ஓர் உத்தரவில் அதிபர் பிரேமதாசா கூறியுள்ளார்.

இதற்கிடையில் தமிழர், முஸ்லீம்களுக்குத் தனிப்பிரிவுகளைக் கொண்ட ஒரே மாகாண சபையின் கீழ் வடகிழக்கு மாகாணங்களை நிரந் தரமாக இணைப்பதற்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முக்கியமான தமிழர், முஸ்லீம் அரசியல் கட்சிகள் அண்மையில் உடன்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது தொடர்பான பேச்சுவார்த்தை களில் விடுதலைப்புலிகள், ஈரோஸ் ஆகியவை கலந்து கொள்ளவில்லை. (தினமணி, 6-12-90)

**ஆள காட்டிகள்**

ஈழப்புலிகளை அடையாளம் காட்டுவதற் காக ஈபிடிபி, டெலோ, பிளாட், இயக்கப் போராளிகள் அரசுப் படைகளுடன் இணைந்து பணியாற்றி, தமிழ்ப் பகுதிகளில் உள்ள கிராமங் களில் மக்கள் சுதந்திரமாக வாழும் நிலையை ஏற்படுத்தி வருவதாக ரஞ்சன் விஜயரத்தின கூறினார். இலங்கை அரசு இவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்துள்ளது. நிலைமை சீரானதும் இவர்கள் பாதுகாப்புப் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இல்லையேல் அவர்களைத் தூக்கி எறிந்து விடுவோம் என்றும் கூறினார். (தினமணி, 7—12—90)

**இணைப்புக்கு எதிர்ப்பு**

வடக்கு—கிழக்கு மாகாண இணைப்பை முஸ்லீம்கள் எதிர்த்துள்ளனர். இரு மாகாணங் களையும் பிரிப்பதற்கான தங்கள் பிரசாரத்தை வலுப்படுத்த 'கிழக்குமாகாண ஐக்கியமுன்னணி' என்ற அமைப்பைத்தொடங்குவது எனவும்அவர் கள் முடிவுசெய்துள்ளனர். (தினமணி, 10-12-90)

**இந்தியா படைகளை அனுப்பாது**

''இலங்கை ஒரு சுதந்திர நாடு. அது ஆயுதங்கள் வாங்குவதை தடுக்க நம்மால் முடியாது. ஆனால் இலங்கையின் ஆயுதக் கொள்முதல் மற்றும் பிற நடவடிக்கைகள் பற்றி இந்தியாவுக்கு முழு விபரம் தெரியும். இலங் கைக்கு படைகளை இந்தியா அனுப்பாது. அதேநேரத்தில் பிற வெளிநாட்டுச் சக்திகளும் இலங்கை விவகாரங்களில் தலையிட இந்தியா அனுமதிக்காது. இலங்கை துண்டாடப்பட இந்தியா அனுமதிக்காது. அதே நேரத்தில் இலங்கைக்கு எதிரான பயங்கரவாதச் செயல் களுக்கு இந்தியா அடிப்படைத் தளமாகப் பயன் படுத்தப்படுவதையும் இந்தியா அனுமதிக்காது என்றும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு, வெளியுறவுத்துறை அமைச்சர் வி.சி. சுக்ல விளக்கமளித்தார். (தினமணி, 12-12-90)

**வெற்றியை நோக்கி யார்?**

ஆறு மாதங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நடத்தியபின், வெற்றி பெறக் கூடிய தருணம் வந்துள்ளதாக இலங்கை அரசு கூறுகிறது. இதே போல் புலிகள் தரப்பிலும் கருதது தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில், வடக்கு கிழக்கில் நடைபெறும் சண்டை பற்றி கொழும்பில் மக்கள் அதிக அக்கறை காட்டு வதில்லை. தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத் துவதற்கே பல தொல்லைகளை சமாளிக்க வேண்டியிருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டு கின்றனர். அரசின் அறிக்கைகளில் அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை, (தினமணி, 12—12—90).

**பிரிட்டனுடனான உறவின் விளைவு**

ஜெயவர்த்தன ஆட்சியின் போது இந்தியா வுக்கு எதிரான ஒப்பந்தம் ஒன்றைப்புதுப்பிக்கும் படி பிரிட்டனை இலங்கை கேட்டுக் கொண்டு, இதனால் இந்தியாவுக்கு இலங்கை மீது சந்தேகம் ஏற்பட்டது. பகைமை நோக்கம் கொண்ட இலங்கையை சமாளிக்க வேண்டிய துள்ளது என்ற முடிக்கு இந்தியா வந்தது. முந்தைய அரசின் முட்டாள்தனமான இந்தத் தவறு காரணமாகத்தான் பின்னாளில் இந்திய இலங்கை உடன்பாட்டையும், இந்திய அமைதிப் படையையும் இலங்கை ஏற்றுக்கொள்ளவேண்டி யிருந்தது—என்று இலங்கை எதிர்கட்சித் தலைவர் அனுரா கூறியுள்ளார் (தினமணி, 13—12—90)

**போராளிகள் கைது**

இலங்கைப் போராளிகளுடைய நடமாட்டத் தைக் கட்டுப்படுத்தவும், அவர்களை ஒரு கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வரவும், மாநில அரசும் மத்திய அரசும் கலந்து பேசி, நேற்று பல மாவட்டங்களில் சோதனையிட்டு விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் 81 பேரை கைது செய்தனர். சோதனையில் ஆயுதம் ஏதும் கிடைக்கவில்லை என்றும் அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தினமணி, 15—12—90) □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கனடாவில் தேசிய இனப் பிரச்சனை

□ □ □

### கியூபெக்

கியூபெக் மாநிலத்தின் மொத்தப் பரப்பளவு 1540 680 சதுர மீட்டர். தலைநகர் கியூபெக் (Quebec city) மொத்த ஜனத் தொகை சுமார் 6 619 000, இதில் பிரெஞ்ச் மக்கள் 89% ஆங்கிலேயர் 9% இத்தாலியர் 2% ஆகும்.

கியூபெக் மாநிலம் கனடாவின் ஒரு தனித்துவமான மாநிலமாகும். பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் இம்மாநிலத்தில் பிரெஞ்சு மொழிப் பாதுகாப்பு என்பது உள்ளூர் அரசியலின் ஜீவகோஷமாகும் கனடாவின் உத்தியோகபூர்வ மொழிகளாக ஆங்கிலமும் பிரெஞ்சும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் கனடாவின் இருமொழிக்கொள்கை அமுலாக்கலிலிருந்து கியூபெக் மாநிலம் விலகி இன்றுவரை பிரெஞ்சுமொழி, பிரெஞ்சு கலாச்சாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தில் பல சட்டங்களை இயற்றியுள்ளது. இயற்றிவருகிறது. இது கியூபெக்கில் வாழும் ஆங்கில மக்களின் அதிருப்தியை மட்டுமல்லாது மற்றைய மாநிலங்களில் கணிசமான கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் கனடாவின் சிறுபான்மைபிரெஞ்சுக்கலாசாரத்தை பாதுகாக்க இத்தகைய சட்டங்கள் மிக அவசியமென பெரும்பான்மை கியூபெக் மக்கள் கருதுகிறார்கள்.

பல நூற்றாண்டு காலமாகவே பிரெஞ்சு- ஆங்கில மோதல்கள், கசப்புணர்வுகள் இருந்து வந்திருக்கிற தெனினும், 1960பதுகளிலிருந்து வளர்ந்து வரும் கியூபெக் மாநிலத்தின் தனி நாட்டுக் கோரிக்கையும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும் கனடியச் சரித்திரத்தின் பதட்டமான பக்கங்களாகும். 1960பதுக்களின் பிற்பகுதியில் நாமே நமக்கு எஜமானர்கள் (Maitres Chez nous) எனற கோஷத்துடன் பிரெஞ்சுத் தேசியவாதம், பிரிவினைவாதமாக வளர ஆரம்பித்தது. அப்போதைய பிரதம மந்திரியான லெஸ்டர். பீ. பேர்ஷன் கொணர்ந்த இருமொழிக் கலாச்சார அமுலாக்கல் சட்டங்களும் இத் தேசிய வாதத்தை மேன்மேலும் வளர்க்கவே உதவின.

1969 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட உத்தியோகபூர்வ மொழிச் சட்டம் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரண்டு மொழிகளும் கனடா முழுவதும் உத்தியோக பூர்வ மொழிகளாக இருக்க வேண்டுமென பிரகடனப்படுத்தியது. இதைத் தொடர்ந்து கியூபெக் மாநிலத்தில் தீவிரவாதப் போராட்டக் குழுக்கள் தோன்ற ஆரம்பித்தன.

தீவிரவாதக் குழுவான Q. L. F. கியூபெக் விடுதலை முன்னணி 1970 ம் ஆண்டு கியூபெக்கின் அமைச்சரான பியர் லபோட்டினை கடத்தி கொலை செய்ததும், பிரித்தானிய வர்த்தக கமிஷனரான ஜேம்ஸ் க்ரோஸை கடத்தியதும் அப்போதைய பிரதம மந்திரி பியர் ட்ரூடோவை வெகுளச் செய்தன. யுத்தகால சட்டங்களை பிரகடனப்படுத்தியே கியூபெக் தீவிரவாதிகளை ஒடுக்கினார் ட்ரூடோ.

தீவிரவாதநடவடிக்கைகள் ஓய்ந்தபோதிலும் கியூபெக் தனிநாடாக வேண்டும் என்ற அரசியல் போராட்டம் ஓயவில்லை. 1976 இல் பிரிவினை வாதக் கட்சியான "பார்டி கியூபெக்குவா" கியூபெக் மாநில அரசை பெரும் வெற்றியுடன் கைப்பற்றியது. இதன் தொடர்ச்சியாக கியூபெக் கனடாவின் இணைப்பில்இருந்து பிரியவேண்டும் என்ற கோசம் கியூபெக் முழுவதும் பலமாக எழுந்தது. பல்வேறு கோணங்களில் அரசியல் விவாதங்கள் பிரிவினையையொட்டி ஏற்பட்டன. அரசியல் ஸ்திரமற்றநிலை உருவாகும் தோற்றப்பாடு தோன்ற பணவீக்கம் போன்ற பொருளாதார ஆட்டங்கள் கியூபெக் மாநிலத்தின் பிரிவினையைக் காரணம் காட்டி ஏற்படுத்தப்பட்டன, பிரதமர்ட்ரூடோ பிரிவினைக்குஎதிரான பலமான பிரச்சாரத்தை ஆரம்பித்தார். இதனால் கியூபெக் பிரிவதையொட்டி 1980 ஆம் ஆண்டு மே 22இல் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் பெரும்பான்மையோர் கியூபெக் பிரிவதை எதிர்த்து வாக்களித்தனர். பார்டி கியூபெக்குவா தலைவர் ரெனி லவாக் "அடுத்தமுறை...." எனச் சொல்லி தனி நாட்டு கோரிக்கையை அப்போதைக்கு நிறுத்தி வைத்தார். அன்றிலிருந்து கனடாவில் கியூபெக் அங்கம் வகிக்கினும் தனிநாட்டு

---

## வறட்சி

தனக்கு மட்டுமன்றித்
தன் இனத்துக்கே
மீன் மறுத்து
வரம் பெற்ற
ஒற்றை
நா
ரை
சுவர்க்கம்
புகும்.

பொற்றாமரை
யோ

மீனும்
நீரும்
அற்றுப்
போகும்.

—ந. ஜயபாஸ்கரன்

www.tamilarangam.net



**கனடாவிலிருந்து ஈழத் தமிழர்களால்**

**வெளியிடப்படும்'தேடல்'என்னும்இதழிலிருந்து**

**இக்கட்டுரையைப் பிரசுரித்துள்ளோம்.**

**கட்டுரையை எழுதியவர் : க. சிந்துராஜன்.**

கோரிக்கை நிறுபூத்த நெருப்பாக மாறியது. பிரதிபலிப்பாக பிரெஞ்ச் மொழியில் மட்டும் அமைந்த விளம்பரப் பலகைகளையே கியூபெக்கில் பொருத்த வேண்டும் என்பது போன்ற பல சட்டங்களை கியூபெக் மாநில அரசு பல்வேறு எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது நிறைவேற்றியது. மேலும் கல்வி, வேலை வாய்ப்புக்கள் என்பவற்றில் பிரெஞ்ச் மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. கனடாவின் அரசியல் சாசன மாற்றத்திற்கு ஒப்புதல் அளிக்காது மறுதலித்தது. கியூபெக்கின் ஆங்கில மொழிபேசும் மக்கள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக மனித உரிமைகள் கமிஷனுக்கு முறையிடுமளவிற்கு கியூபெக் அரசின் மொழிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்றுவரை தொடர்கின்றன.

இவ்வகை நடவடிக்கைகள் கியூபெக்கில் தொடரும் அதே சமயத்தில் கனடா மத்திய அரசு கியூபெக்கை சமாதானப்படுத்தும் முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது. பொருளாதார ரீதியில் கியூபெக்கை புறக்கணிக்காத வகையில் பல தொழிற் கேந்திரங்கள் கியூபெக்கின் மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டன. கியூபெக்கால் நிராகரிக்கப்பட்ட கனடாவின் அரசியல் சாசனத்திற்கு ஒப்புதல் பெறும் வகையில் பிரதம மந்திரி பிரையின் மல்ரோனியம் கனடாவின் பத்து மாநில முதல்வர்களும் 1987 ஏப்ரலில் கூடி கியூபெக்கை ஒரு தனித்துவமான சமூகமாக அங்கீகரிக்கும் வகையில் அமைந்த மீச்லேக் ஒப்பந்தத்தை வடிவமைத்தனர். இவ் ஒப்பந்தமானது ஏகமனதாக நிறைவேற்றப்பட இயலாதவாறு அரசியல் சாசன விவாதங்கள் தொடர்கின்றன. இதனால்தான் தற்போது மீண்டும் கியூபெக் தனிநாட்டுக் கோரிக்கை தோன்றித் தொடர்கின்றது. ◻

## ஆயுதங்கள்

**கனிவண்ணன்**

ஆயுதங்கள் ஆபத்தானவையே
ஆனால்
அழகானவையுங்கூட.

ஹிட்லரின் நாய்களும் ஏந்தின
நிக்சன்....போத்தா....
இன்னும் தொடரும்
இதயமில்லாதவர் கைகளில்.

அதற்காக
ஆயுதங்களை வெறுக்கவுங் கூடுமோ?

வழிந்த கண்ணீரைத் துடைத்தன
வழி காட்டிகளாகி ஒளிர்ந்தன
வரலாற்றை எழுதின.

ஆயுதங்கள்
எஃகால் மட்டும் ஆனவை அல்ல
எலும்பால்—சதையால்—நரம்பால்
உயிரும் உணர்வும் கொண்டு உருவாயின.

எழுச்சியுற்ற மக்களின்
உள்ளமும்
ஓங்கிய கைகளும் ஆயுதங்களே.

சமாதானம் பேசுவோம்
சமாதானம் கொள்வோம்
துப்பாக்கிகளைக் கவிழ்த்து
வெள்ளைக் கொடிகளைக் கட்டுவோம்
தேவையானால்
திருப்பிக் கொள்வோம். ◻

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காந்திலால் சேட், வைப்பாட்டி மோதி ராணியின் மடியில் படுத்துக்கொண்டு உயிர் துறந்தார்.

மோதிராணியின் மந்தபுத்தி படைத்த மகன் நட்வர்லால் தன்னுடைய தடித்த கீழ் உதடு வழியாக எச்சிலை வடிய விட்டுக் கொண்டு தூங்கி வழிந்தான்.

கதவின் பின்னால் நாங்கள்-புரோக்கர்கள்-சேட்ஜியின் மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தோம்.

சேட்ஜி எங்களுக்குக் கடவுளைப் போன்றவர்.

உலோகச் சந்தையில் சேட்ஜியின் வருகைக்குப் பிறகுதான் 'தரகுத் தொழிலுக்கே இன்றைய மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது.

வாடிக்கையர்ளர்கள் வியாபாரிகளின் 'குடோன்' களில் ஏறி இறங்கிக் கொண்டிருந்த காலத்தில் தான் சேட்ஜி தோன்றுகிறார். அரைஞாணில் முடிபோட்டு வைத்துக் கொண்டிருந்த பணப்பையில் ஐந்துருபாய் மட்டுமேமூலதனமாக இருந்தது!

பீக்கானீர் பாலைவனத்தின் குடிநீர் கூடக் கிடைக்காத அக்குரியாகிராமத்திலிருந்து தாயார் அளித்த உலர்ந்த சப்பாத்திப் பொட்டலத்துடன் புறப்பட்ட பதினாறு வயது கூட முற்றுப்பெறாத காந்திலால் உலோகச் சந்தையில் கோஜா என்பவரின் குடோனை வந்தடைந்தான். மார்வாடிப் பையனுக்கு எழுதப் படிக்கத் தெரியுமாதலால் முசல்மான் கோஜா தன்னுடைய கணக்குப் பிள்ளையின் உ த வி யா ள னா க அவருக்கு வேலை கொடுத்தார்.

அந்த ஆண்டு உலோகங் களுக்கெல்லாம் விலைச்சரிவு ஏற்பட்டது.வியாபாரிகள் திவாலாகி 'உண்டி' க்காரர்கள் ஜப்திக்காக அந்த தீபாவளி நாட்களில் அலைந்து கொண்டிருந்தார்கள். கணக்கெழுதிக் கொண்டிருந்த காந்திலால் கோஜாவிடம் கேட்டார்:

''மியாஜி.... இங்கு கணக்கெழுத எதுவும் இல்லையே.... தெருவில் இறங்கி செப்புத் தகடு விற்கட்டுமா?

இரண்டுவாரமாக ஒரு ராத்தல் செப்புத்தகடு கூட விற்காமலிருந்த கோஜாவிற்கு அதை விட மகிழ்ச்சி என்ன இருக்க முடியும்?

அப்போது அவர் முசல்மானிடம் மீண்டும் கேட்டார்:

''மியாஜி.... வியாபாரம் நடைபெற்றால் எனக்கு என்ன தருவீர்?

# அம்மா

□

□

''ஒரு டக்கா.''

''போதாது மியாஜி....ஐந்துடக்கா தேவை.' காந்திலால் கூறினார்.

அவர்கள் இருவரும் சேர்ந்து அன்று முடிவு எடுத்ததுதான். இன்று நாங்கள் தரகர்கள் எல்லோரும் பெறும் இரண்டரைடக்கா கமிஷன். அவருடைய பின்னால் வந்தவர்கள்தான் இந்தச் சந்தையின் தரகர்கள் அனைவரும்!

சாவு நெருங்கி விட்டதை உணர்ந்த சேட்ஜி தன்னுடைய குடும்ப டாக்டர் தயாபாயை அழைத்து வரச் சொன்னார்.

வலது கை ஆள்காட்டி விரலில் அணிந்திருந்த மோதிரத்தை அவர் டாக்டரின் முன் நீட்டினார். இருபது ஆண்டுகளாக டாக்டர் ஆசையாகப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த ஒன்பது வைரக்கற்கள் பதித்த மோதிரம் அது! தயாபாயின் கண்கள் ஈரமாயின.

அப்போது சேட்ஜி கேட்டார்;

''டாக்டர் தயாபாய், நீங்கள் என்னிடம் உண்மை சொல்ல வேண்டும். நான் மீண்டும் எழுந்து நடமாடுவேனா?

டாக்டர் தயாபாய் உண்மையைச் சொன்னார்.....

மோதிரத்தை உருவி எடுத்துக் கொள்ள சேட்ஜி டாக்டருக்கு உத்தரவிட்டார்....

மரணத்திற்குப் பிறகு தன்னுடைய உதகக் கிரியைகளைச் செய்ய வேண்டிய சொந்த மனைவியையும், ஒரேமகனையும் அழைப்பதற்குமாறாக தரகர்களை அழைத்துவரத்தான் சேட்ஜி உத்தரவிட்டார் ...

தரகர்களின் தலைவரான சுரேந்திரபாய் மோதிராணியிடம் வினவினார்:

எம். பி. நாராயணப்பிள்ளை

மூலம் : மலையாளம்

தமிழில் : வி. கே. பாலகிருஷ்ணன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''சேட்ஜியின் மனைவிக்கும் மகனுக்கும் தகவல் தெரிவிக்க வேண்டாமா?''

''நிச்சயமாக ..., ஆனால் அதற்கு முன் சில பணிகளைச் செய்து முடிக்க வேண்டும்''....மோதிராணி கூறினாள்.

சேட்ஜியின் தலையை மடியிலிருந்து இறக்கி வைத்துவிட்டு மோதிராணி பூஜை அறைக்குள் நுழைந்தாள். பின்னால் எச்சிலை ஒழுக்கியவாறு அவளுடைய மகன் நட்வர்லாலும் சென்றான்.

மோதிராணி ஒருதடித்த காகித உறையுடன் திரும்பி வந்தாள்.

உறையைச் சுரேந்திர பாயிடம் அளித்து விட்டு அவள் கூறினாள்:

''இதைச் சற்றுப் படித்துப் பாருங்கள்.''

நாங்களும் சுரேந்திரபாயின் பின்னால் நின்றவாறு அந்தத் தாளுக்குள் எட்டிப் பார்த்தோம்.

அது சேட்ஜியின் உயில்!

சேட்ஜியின் கைப்பட எழுதி, சாட்சிகளின் முன்னால் கையொப்பமிட்ட உயில்!

அந்த உயிலின்படி சேட்ஜியின் கோடிக் கணக்கான ரூபாய்ச் சொத்துக்கள சேட்ஜியின் ஆசைநாயகியாவதற்கு முன் மோதிராணிக்கு இன்னொருவரால பிறந்த மந்தபுத்திச் சிறுவன மகன் நட்வர்லாலுக்குச் சொந்தம்.

நட்வர்லால்அப்போதும் கடைவாயில்எச்சில் ஒழுகத் தூங்கி வழிந்து கொண்டிருந்தான்.

சொந்த மனைவிக்கும் மகனுக்கும் அவர்கள் தற்போது வசிக்கும் வீடடைக் கூட சேட்ஜி உயிலில் எழுதி வைக்கவில்லை.அது மட்டுமன்றி அவர்களை வெளியேற்றி அந்த வீட்டை விற்று பணத்தை சிறுவன் நட்வாலாலின் கார்டியன் மோதிராணியிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஒரு ஷரத்தும் இருந்தது. உயிலை அமுல் நடத்தும நிர்வாகியாக துராசை மிக்கவரும், கெடுமதியாளனுமாகிய வழக்கறிஞர் ஒபராய் என்பவரை நியமித்திருந்தார்.

ஆறு மாதங்களுக்குள் உயிலின் எல்லா ஷரத்துக்களும் அமுல படுத்தப்பட்டால் வீட்டை விற்றுக் கிடைக்கும் பணத்தில் பாதியை வழக்கறிஞர் ஒபராய்க்கு சன்மானமாகக் கொடுக்க வேண்டுமென்றும் உயிலில் குறிப்பிடப் பட்டிருந்தது.

ஒரு வார்த்தைகூடப் பேச முடியாமல் சுரேந்திரபாய் உயில்பத்திரத்தை மோதிராணியிடம் திருப்பிக் கொடுத்தார். மூச்சிழுத்துக் கொண்டிருந்த சேட்ஜியின் தலையை எடுத்து மீண்டும் தன்னுடைய மடியில் வைத்துக்கொண்டு மோதிராணி கூறினாள்.

''சுரேந்திரஜி....இனி சேட்டம்மாவை வரவழைக்கலாம்....''

''நானே போய் அழைத்து வருகிறேன்....'' சுரேந்திரபாய் கூறினார்.

துணைக்கு அவர் என்னையும் அழைத்தார்.

காரில் ஏறியவுடன் நான் சுரேந்திரபாயிடம் கேட்டேன்.

''இது ரொம்பக் கொடுமையில்லையா....?'

''என்ன செய்வது? சேட்ஜி கடுமையானவர் தான்! அந்தக் கடுமையான பிடிவாதம்தான் அவரை கோடீஸ்வரராக்கியது! ஆயினும் வீட்டார் அதை ஒப்புக்கொள்ளவேண்டாமா....?'' சேட்ஜியின் சமவயதுடைய நெடுநாள் நண்பர் சுரேந்திரபாய் கூறினார்.

''சேட்ஜி மனைவியைப் பிரியக் காரணம் என்ன?'' நான் கேட்டேன்.

''சேட்ஜி மனைவியைப் பிரியவில்லை. அவர் யாரையும் விலக்கமாட்டார். கல்கத்தாவில் மோதிராணியைச் சந்திக்கும் வரை சொந்த மனைவியைத் தவிர வேறொரு பெண்ணை சேட்ஜி ஏறெடுத்துக்கூடப் பார்த்ததில்லை. ஆனால் யாராவது ஒரு பெண்ணுடன் படுக்கையைப் பங்கிட நேர்ந்தால் அந்த வினாடியே அவள் தன்னுடைய மனைவியாகிவிடுவாள் என்று அவர் நம்பினார். இன்னொரு சேட்டம்மா! வெளி நாட்டுக்குச் சென்று கல்விபயின்ற தன்னுடைய ஒரே மகனிடம் மோதிராணியையும் அம்மா என்றழைக்க சேட்ஜி கட்டளையிட்டார்.

''இந்த வேசியை நான் அம்மா என்று அழைக்கவா?'' என்று அவன் திருப்பிக் கேட்டான்.

சேட்ஜி அமைதியாகச் சொன்னார்.

''ஆம்; நான் விரும்பும் பெண்ணை என் மகனும் அம்-ா என்று அழைக்கத்தான் வேண்டும்....''

திகைத்து நின்ற மகனிடம் சேட்ஜி தொடர்ந்து சொன்னார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தந்தையால் நிச்சயிக்கப்படுவதுதான் தாய் தந்தையால் ஒப்படைக்கப்படும் 'விந்தை' முதலில் தன்னுடைய கருப்பையிலும் பிறகு வெளியேயும் வளர்த்து திரும்ப தந்தையிடம் ஒப்படைக்கும் வளர்ப்புத்தாததிதான் தாய் ...!''

மகன் உடனே திருப்பிக் கேட்டான்.

''தந்தை ஒப்படைத்த 'விந்து'தான் என்பதற்கு என்ன ஆதாரம்?''

.... .... .... ........

''அன்று சேட்ஜியின் மகன் அங்கிருந்து வெளியேற்றப்பட்டான். மகனைத் தொடாந்து சேட்ஜியின் மனைவியும் வெளியேறினாள். ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமாத்தி அவர்கள் அங்கு வசிக்கலாயினர். நகைகளை ஒவ்வொன்றாக விற்றுச் சேட்டம்மா வாழ்க்கை நடத்தினாள்....''

''அந்த வாடகை வீட்டையும் சேட்ஜிஅதன் உரிமையாளரிடமிருந்து விலைக்கு வாங்கினார். அவரிடம் இருந்து தப்புவதென்பது சேட்டம்மா வாலும், மகனாலும் இயலாத விஷயம்....''

''அப்படியானால் இந்தக் கோடிக்கணக்கான ரூபாய்ச் சொத்துக்களும் தொழிற்சாலைகளும், குடோன்களும், அனாதை விடுதிகளும், கலவி நிறுவனங்களும் அனைத்தும் அந்த மந்தபுத்திச் சிறுவனுக்குததான் சொந்தமா?'' நான் கேட்டேன்.

''நிச்சயமாக! நான் ஏற்கெனவே சொன்னேனல்லவா, அவர் கடும்பிடிவாதக்காரர்என்று! மோதிராணியை தன்னுடைய மகனின் இன்னொரு தாயாக்க அவர் விரும்பினார். அந்த நினைப்பை நடப்பில் கொண்டு வருவது தான் அவருடைய குறிக்கோள். படுக்கையில் விழாவிட்டால் அவர் அதையும் சாதித்திருப்பார்....''

சேட்டம்மாவும் மகனும் வசிக்கும் வீட்டின் முன் எங்கள் கார் நின்றது. நான் காரிலேயே அமர்ந்திருக்க சுரேந்திரபாய் மட்டும் உள்ளே நுழைந்தார். சென்ற ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் அவர் வெளியே வர பின்னாலேயே சேட்ஜி மகனும், மனைவியும் வந்தனர். அவர்கள் தங்களுடைய காரில் முன் செல்ல எங்கள் கார் பின் தொடர்ந்தது.

மோதிராணியின் மாளிகை வாயிற்படியை மிதிக்கும்போது நாங்கள் முன் செல்ல அவர்கள் பின்னால் நகர்ந்து கொண்டிருந்தனர்.

அதற்குப் சேட்ஜியின் மூச்சு நின்றிருந்தது. கட்டிலுக்கு அருகாமையில் தரகர்களோடு சேர்ந்து டாக்டர் தயாபாயும் அட்வகேட் ஒபராயும் நின்று கொண்டிருந்தனர்.

சேட்ஜியின் மனைவியும், மகனும் உள்ளே நுழைந்ததும் மறைந்த சேட்ஜியின் தலையை தன்னுடைய மடியிலிருந்து இறக்கி வைத்து எழுந்த மோதிராணி ஒரு ஓரமாக ஒதுங்கி நின்றாள்.

சேட்ஜியின் சடலத்தை உயிரற்ற பதுமைகள் போல் மனைவியும் மகனும்உற்றுப்பார்த்துக் கொண்டிருக்க மோதிராணி உள்ளே சென்று உயில்பத்திரம் வைக்கப்பட்ட உறையை எடுத்து வந்தாள்.

எச்சிலை ஒழுக்கியவாறு அவள் பின்னால் தொற்றிக்கொண்ட சிறுவன் நட்வர்லாலை சேர்த்தணைத்து அவள் உச்சி முகர்ந்தாள்.

.... .... .... ........

சற்று நேர இடைவெளிக்குப் பிறகு உறையை சேட்ஜியின் மனைவியிடம் நீட்டினாள்.

''அக்கா....இது சேட்ஜியின் உயில்....இதைப் படித்துப் பாருங்கள். பிறகு சேட்ஜியின் உடலை இங்கிருந்து எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். சிதை எரியும் போது இந்த உயில் பத்திரத்தையும் அதில் போட்டு எரித்து விடவும்....''

அப்போதும் தூங்கி வழிந்த நட்வர்லால் கட்டிலின் கீழ் தன்னுடைய எச்சிலில் தலை சாய்த்தான்....

(கேரளத்திற்கு வெளியில் வாழும் மலையாள எழுத்தாளர்களில் எம். பி. நாராயணப் பிள்ளையும்குறிப்பிடத்தக்கவர்.அவர்தன்னுடைய வாழ் மண்ணின் வாடையுடன் வடித்தெடுத்த சமீபத்திய சிறுகதை ஒன்று இங்கே தரப்பட்டுள்ளது.)

---

**படைப்பாளிகள் கவனத்திற்கு**

- பாலத்திற்கு அனுப்பப்படும் படைப்புகள் வேறு இதழ்களுக்கு அனுப்பப்படவில்லை என்று உறுதி கூறவேண்டும்.
- தெரிவு செய்யப்படாத படைப்புகளைத் திரும்பப் பெற உரிய அஞ்சல் தலை ஒட்டப் வேண்டும். உரிய அஞ்சல்தலை இல்லதா பட்சத்தில் படைப்பை திரும்பப் பெற எந்த மடல்வழித் தொடர்பும் கொள்ளப்பட மாட்டாது.
- படைப்பு கிடைத்த இரண்டு மாதங்களுக்குள் பிரசுரம் செய்வதற்கான செய்தி படைப்பாளருக்குத் தெரிவிக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## திராவிடர்/திராவிடம்:

# திராவிட இயக்கத்தின் பெயரிடுதல் குறித்த வரலாற்றுப் பார்வை

□

□

கோ. கேசவன்

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியமூன்று அமைப்பையும் திராவிடஇயக்கம் எனப் பொதுவாகப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

அமைப்புகளுக்குச் சூட்டப்படும் பெயர்கள் ஏதேனும் ஒரு நோக்கம் கருதியதாகவே இருந்துள்ளது. அந்த நோக்கத்துக்கும் யதார்த்தத்துக்கும் எந்த அளவு திராவிட இயக்கங்கள் பொருந்திவந்துள்ளது என்பதைநாம் பருண்மையாகக் காண வேண்டும். திராவிடர் கழகம் என்பதில் திராவிடர் என்ற இனத்தைக்குறிக்கும் முன்னொட்டு வந்துள்ளது. தி.மு.க., அ. இ. அ. தி. மு க. ஆகியவற்றில் திராவிட என்ற புவியியல் பகுதியைக் குறிக்கும் முன்னொட்டு வந்துள்ளது.

திராவிட இயக்கத்தின் தாய்க் கட்சியான தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (அதாவது நீதிக் கட்சி) என்பதில் திராவிடர் என்ற ஒட்டு இல்லை. இது நடத்திய தமிழ் இதழின் பெயர் திராவிடன் என்றுஇருப்பினும் தெலுங்குஇதழின் பெயர் ஆந்திரப் பிரகாசிகா என்று இருந்தது. டாக்டர் சி. நடேசன் அவர்களின் முன் முயற்சியால் தொடங்கப்பட்ட அமைப்பின் பெயர் திராவிடர் மன்றம் என்பதாகும். ஆனால் தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர் ஆகியோர் பல ஜமீன்தார்களுடன் இணைந்து ஒரு லட்சம் ரூபாய் மூலதனத்தில் தொடங்கிய கூட்டுப் பங்கு நிறுவனம் தென்னிந்திய மக்கள் மன்றம் (South Indian Peoples' Assn,) ஆகும். இதன் செயலர் என்றவகையில் தியாகராயாவெளியிட்ட அறிக்கை (1916 டிசம்பர்) பிராமணரல்லாதார் அறிக்கை என்றபெயரில் வந்தது. நீதிக்கட்சியில் தமிழ், தெலுங்கு தேசிய இனத் தலைவர்களே மிகுந்திருப்பினும் தெலுங்குத் தலைவர்களே மேலாதிக்கத்தில் இருந்தனர். நீதிக் கட்சியின் பெயர் இடுதலில் தென்னிந்தியா, பிராமணரல்லாதார் ஆகிய தொடர்கள் மட்டுமேஉள்ளன; திராவிடர் இல்லை.தமிழ் இதழின் பெயர் மட்டும் திராவிடன் என வைக்கப்பட்டது. பெரியார் பின்னாளில் குறிப்பிட்டதைப் போல 'நீதிக் கட்சியின் தெலுங்கு தேசிய இனத் தலைவர்கள் திராவிடர் என்பதை ஒப்புக் கொள்ளாததால் கட்சியின்பெயரில் திராவிடர் சேர்க்கப் படவில்லை' (குடிஅரசு 17·6·44). அதாவது தென் பகுதியில் உள்ள ஏனைய தேசிய இனங்களோடு இணைந்து நடத்திய அமைப்புகளில் தென் இந்தியப் பிராமணரல்லாதார் என்பதையே தெலுங்கர்கள் பொதுவான அடையாளமாக்கிக் கொண்டிருந்தனர். தம் பகுதிகளில் உள்ள அமைப்புகளுக்குத் தம் தேசிய இனப்பெயரையே தெலுங்கர்கள் சூட்டிக்கொண்டனர். பத்திரிகையின் பெயர் ஆந்திரப் பிரகாசிகா என்பதாகவும் பல்கலைக்கழகத்தின் பெயர் ஆந்திராப் பல்கலைக் கழகம் என்பதாகவும், தாழ்த்தபட்டோர் பெயர் ஆதிஆந்திரர் என்பதாகவும் (அரசு ஆணை எண் 817, சட்டம் பொதுத்துறை நாள் 25-3-1922) அமைந்தன. இங்கு நீதிக்கட்சித் தலைவர்கள் திராவிடர் என்ற இனப் (Race) பெயரைச் சூட்டிக்கொள்ளாமல் தெலுங்கர்என்ற தேசிய இனப்(Nationality) பெயரைச் சூட்டிக் கொண்டனர். ஆனால் தமிழ்ப் பத்திரிகையின் பெயர் திராவிடன்என்பதாகவும் தமிழ்த் தீண்டத்தகாதார் பெயர் ஆதி திராவிடர் என்பதாகவும் அமைந்தன. தமிழ் பேசும் பகுதிகளில் வைக்க இருந்த பல்கலைக் கழகத்தின் பெயர் 'தமிழ்ப் பல்கலைக் கழகம் என்பதற்குப் பதிலாகத் திராவிடப் பல்கலைக் கழகம் என இருக்க வேண்டும்' என தமிழ்த் தலைவர்கள் மன்றாடினர். இங்கு நீதிக் கட்சித் தமிழ்த் தலைவர்கள் தேசிய இனத்தை விட இன அடையாளத்தோடு தம்மைத் தொடர்பு படுத்திக் கொள்ள விரும்பியிருந்தனர்.

நீதிக் கட்சியின் பெயரை திராவிடர் கழகம் (27-8-44 சேலம் மாநாடு) என்று மாற்றும் பொழுது அதில் தெலுங்குத் தலைவர்கள் ஆதிக்கம் இல்லை. இதற்கு முன்னரே கூடிய திருவாரூர் மாநாட்டில் (4. 8. 40) திராவிடர், திராவிட நாடு ஆகியவை குறித்த கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன. இந்த மாநாட்டில் (4, 8. 40) அமைக்கப்பட்ட திராவிட நாட்டுப் பிரிவினை வகுக்கும் திட்டக் குழுவில் தமிழர்களே அதிகம் இருந்தனர். இந்தக் கட்டத்தில் பெரியார் குறிப்பிட்டுள்ளார்;

"இந்தியர் என்பதை மறுக்கிறபடியாலும் இன உணர்ச்சியும் எழுச்சியும் பெற வேண்டுவதாலும் திராவிடர் என்ற பெயரைக் கொண்டோம்" (குடியரசு 9. 12.44). இன்னோ

www.tamilarangam.net



ரிடத்தில் பெரியார் குறிப்பிட்டுள்ளார்! இந்தியர் என்பது தப்பு என்பது மட்டுமல்ல, வெறும் கற்பனையும் கூட. (குடியரசு 17. 6. 44). இங்கு நீதிக் கட்சியின் பெயரில் உள்ள தென்னிந்திய, இந்தியக் கண்ணோட்டங்கள் மறுக்கப்பட்டு திராவிடர் என்ற இன உணர்ச்சியே மையம் கொள்கிறது. ஆனால் திராவிடர் என்பதற்குப் பெரியார் எப்பொழுதுமே ஒரே பொருளையே கொண்டிருந்தார் எனக் குறிப்பிட முடியாது.

திராவிடர் என்றால் தமிழர், தெலுங்கர், மலையாளி, கன்னடர் ஆகியோர்களைக் குறிக்கின்றது எனப் பெரியார் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். பிறிதோரிடத்தில் ஆரியர் தவிர்த்த ஏனைய மக்களை- முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் உட்பட- திராவிடர் எனக் குறிப்பிடுகின்றார் (விடுதலை 5-10-48). இஸ்லாமியம் கிறிஸ்துவம் ஆகிய சமயங்களில் உள்ள அனைவரையும் திராவிடர் இனத்துக்குள் சேர்க்க இயலுமா என்பது சர்ச்சைக்குரிய ஒன்று. தமிழகப் பகுதிகளில் ஆரியர் இனத்தைச் சேர்ந்த பலர் சமயம் மாறி முஸ்லீம்களாகவும் கிறிஸ்துவர்களாகவும் ஆகியுள்ளனர். எனவே இவர்கள் எல்லோரையும் திராவிடர் இனத்துக்குள் சேர்க்க முடியுமா என்பது அடிப்படைப்பிரச்சனையாகும். பொதுவாக இங்கு (விடுதலை 5- 10-48) சமய அடிப்படையில் இ ன த் தை த வரையறுக்கும் தவறான அணுகுமுறையே உள்ளது.

ஒரு மக்கள் தொகுப்பு தான் வாழுகின்ற புவியியல் சூழலில் தட்ப-வெப்ப நிலைமைக்கு ஏற்ப உடற்கூற்றில் சில பொதுவான அம்சங்களைக் கொண்டிருப்பதை வைத்துக் கணிக்கும் இனப் பிரிவினையைப் பெரியார் ஒப்புக் கொண்டுள்ளார்(பெரியார் சிந்தனைகள், முதல்தொகுதி பக்கம். 547). எனினும் இந்த நிலைபாட்டிலும் பெரியார் தொடர்ந்து உறுதியுடன் இல்லை. 'பிறவி பார்த்து இனப் பிரிவினை செய்யாமல் அவரவர் பழக்கம் பார்த்து இனப் பிரிவினை பிரிக்கும் படியும்' பெரியார் கேட்டுக் கொண்டுள்ளார் (மேற்படி நூல், பக்கம். 548). 'மக்கள் பிறவியில் பேதம்கிடையாது என்றகொள்கையை உடையவனாக ஒரு ஜப்பானியன் இருந்தால், அவனைத் திராவிடன் என ஏற்றுக்கொள்ளலாம்' எனப் பெரியார் பேசியுள்ளார். திராவிட நாடு, 23.11-46). இங்கு இனம்என்பது ஒரு மனிதன் கொண்டுள்ள கருத்தை வைத்துக் கணிக்கப் படுவதனால் மங்கோலிய இனத்தைச்சேர்ந்தவன் திராவிடனாகவும் ஏற்றுக் கொள்ளப் படுகிறான். பெரியாரின் அன்றைய விரிவுரை யாளரான கா. ந அண்ணா துரை அவர்கள் இதை விளக்கி எழுதியுள்ளார்: "வருணாசிரம தருமத்தை ஆதரிப்பவர் ஆரியர்; அது கூடாது என்பவர் திராவிடர். சுதர்மம்கோருபவர் ஆரியர்;சமதருமம் கோருபவர் திராவிடர் திராவிடர் என்பது ஒரு குறிச்சொல்' என்று அண்ணாதுரை குறிப்பிட்டுள்ளார் (திராவிட நாடு, 23- 11- 46) இவரைப் பொறுத்தமட்டில் வருணாசிரம தருமத்தை எதிர்த்தலே திராவிடரா இல்லையா என்பதற்கான அடையாளமாகும். இன ரீதியில் திராவிடராக உள்ளவர்களில் எத்தனை பேர் இதற்கு இலக்கணமாகஅமைவர் என்பதுமிகவும் ஐயமே. மேலும் இது பிறவி வழி இனக் கோட்பாட்டை மறுத்து விடுகிறது. இங்கு நமக்கு முக்கியம், திராவிடர் என்பதற்குக் கொடுக்கப் படும் பல விளக்கங்களாகும். சென்னை மாகாணம் பிரிக்கப்படாமல் இருந்த காலம் வரையில் சென்னை மாகாணத்தில் உள்ள பிராமணரல்லாதாரையே பொதுவாகத்திராவிடர் எனக் கருதி வந்தனர். இதிலும் குறிப்பாக சென்னை மாகாணப் பிராமணரல்லாதாரில் தமிழர்களையே பொதுவாகத் திராவிடர் எனக் கருதினர். உள்ளார்ந்த முறையில் செயல்பட்ட இந்தப் போக்கு, மொழி வாரி மாநிலப் பிரிவினைக்கு சற்று முன்னும் பின்னும் வெளிப்பட்டது. நான்கு மொழிகள் பேசும் பகுதிகளை இணைத்து உருவாக்குவதாக இருந்த தட்சிணப் பிரதேச அமைப்பு குறித்துப் பெரியார் தம் கண்டனத்தை தெரிவித்தார் (விடுதலை 1-3-55) தட்சிணப்பிரதேச அமைப்பு மொழிவழி மாநிலப் பிரிவினையை மறுத்துவிடுகிறது. மேலும் ஒரு மொழி(இந்தி) பேசும்பகுதியை, நான்குமாநிலங்களாக்கியும் நான்கு மொழிகள் பேசும்பகுதிகளை ஒரே மாநிலமாக்கியும் உள்ள இந்திய அரசின் ஜனநாயக மாண்பும் அடங்கியுள்ளது. இதைப் பெரியார் எதிர்த்திருப்பது நியாயமே. இதில் உள்ள வேடிக்கை என்னவெனில் பிரிட்டனின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் திராவிடத் தனி நாட்டைக் கோரிய தீர்மானங்களில் (எண் 38/4.8.40; எண். ஆ/ 27-8- 4)உள்ள புவியியல் பகுதியே தட்சிணப் பி ர தே ச ம் ஆகும். தட்சிணப் பிரதேசம் என்பது இந்திய மத்திய அரசின் கீழ் உள்ள மாநிலம்; திராவிடர் கழகத்தினர் கோரியது, பிரிட்டன் அரசின் நேரடி ஆதிக்கத்தில் உள்ள மாநிலம் ஆகும். இதற்கு முன்னர் இவர்கள் கோரியதை ஏதேனும் ஒரு விதத்தில் இப்பொழுது புறக்கணித்தனர். இது மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டதையும் இனவாரியாக அல்லாமல் தேசியஇன வழியாக அரசியல் நடவடிக்கைகள், பெரிதும் அமைய வேண்டிய புதிய அரசியல் யதார்த்தத்தையும் உணர்ந்து கொண்டதன் விளைவாகும். இந்த யதார்த்தம் இதற்கு முன்னரேயும் தெலுங்கர்களால் அதிகமாக உணரப்பட்டிருந்தது. தமிழர்கள் இதைத் தாமதமாக உணர்ந்தனரெனினும் திராவிட என்ற இன ஒட்டை உதறாமல் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த இன ஒட்டு சாரமற்றதாக இருந்தது. தட்சிணப்பிரதேச அமைப்பு ஏற்பட்டால் மலையாளிகளும் பார்ப்பனர்களும் எல்லா உத்தியோகங்களையும் பறித்துக் கொண்டுவிடுவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனப் பெரியார் குறிப்பிட்டுள்ளார் (விடுதலை 11-10-55; 14-6-56). இங்கு பார்ப்பனரோடு இணைத்து மலையாளிகளையும் புறந்தள்ளும் பொழுது திராவிடர் என்ற இனஉணர்ச்சி குன்றி விடுகிறது. கேரளம் ஆந்திரம். கருநாடகம் ஆகியவை பிரிந்தபின் தமிழ்நாடுதான் திராவிட நாடு ஆகும் என்று பெரியார் குறிப்பிட்டுள்ளார் (விடுதலை 29-8-56). இங்கு கூட இனவகைப் பட்ட பெயரைப் பொருத்தமற்ற விதத்தில் பயன் படுத்துவதாக நமக்குத் தோன்றலாம். மொழி யின் அடிப்படையிலும் தேசிய இனத்தின் அடிப் படையிலும் பெயரிடவேண்டிய யதார்த்தப் போக்கு மறுக்கப்பட்டுள்ளதாகத் தோன்றலாம். இதற்குப் பெரியார் கூறும் காரணம் சிந்திக்கத் தக்கது. தமிழர் என்றால் பார்ப்பனரும் தம்மைத்தமிழர் என்று கூறிக்கொண்டு நம்மோடு இணைந்துவிடலாம் எனப் பெரியார் கருது கின்றார் (விடுதலை 15-3-48). இங்கு பெரி, யாரின் பார்வை திராவிடர் என்பது பார்ப்பரைல் லாத தமிழர்களை மட்டும் குறிக்கக்கூடியதாக வுள்ளது.

பார்ப்பனரல்லாத தமிழர்களில் பள்ளர், பறையர் எனக்குறிப்பிடப்படும் தீண்டத்தகாதார் அடங்கியுள்ளனரா என்பது பெரிதும் ஐயமே. தீண்டத்தகார்க்குக் கொடுக்கப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்துப் பல இடங்களில் விரி வாக பேசிய பெரியார் இவர்களை திராவிடர்கள் என்ற வகையினத்தில் ஆரம்பத்தில் சேர்க்க வில்லை. ஆதித்திராவிடர்கள் என்று பல இடங் களில் பிரித்துப் பேசியுள்ளார் (குடியரசு 16-6-29; 11-1-31) எங்கள்—உங்கள் என்று பிரித்துப் பேசியதோடு மட்டுமின்றி 'நம்மீதும் உங்கள் மீதும் சுமத்தப்பட்ட இழிவுகள் ஒழியவேண்டும்' எனக்குறிப்பிடுகின்றார் (குடி அரசு 11-1-39). தீண்டத்தகாதார் விஷயத்தில் தம்மைப் போன் றோருக்கு இருக்கும் ஈடுபாட்டைப் பெரியார் வெளிப்படுத்திக் கொள்கிறார். "தீண்டாமை விலக்கு என்னும் விஷயத்தில் நான் ஏதாவது ஒரு சிறிதாகிலும் வேலை செய்திருப்பதாக ஏற்படுமானால் அது எங்கள் நலத்திற்குச் செய் ததாகுமேயொழிய உங்கள் நலத்திற்கென்று செய்ததாக மாட்டாது" (குடியரசு 16-6-29).

"ஆதிதிராவிடர் நன்மையைக் கோரிப் பேசப்படும் பேச்சுகளும் செய்யப்படும் முயற்சி களும் ஆதிதிராவிடரல்லாத மக்களில் பார்ப் பரைல்லாத எல்லோருடைய நன்மைக்கும் என்ப தாக உணருங்கள்" (குடியரசு 11-10-31).

திராவிடர்கள் ஆதிதிராவிடர்கள் ஆகிய தொடர்கள் தொடர்ச்சியாகப் பொருள் வேறு பாட்டுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது (தீர்மானம் எண் 19/4.8.40). பெரியார் சொன்னதைப் போல ஆதிதிராவிடர் அல்லாத பார்ப்பனரல்லாத தமிழர்களையே திராவிடராகக் கருதும் போக்கு உள்ளது. இங்கேயும் கூட திராவிடர் என்ற ஒட்டு தேவையின்றி இருப்பதாகத் தோன்று கிறது. இது மேலோட்டமான நிலை, உண்மை நிலை இதுவன்று, திராவிடர் என்ற இன அடிப் படையிலான ஒட்டு இருப்பதனால் தமிழ்பேசும் பகுதிகளில் உள்ள திராவிடர் இனத்தைச் சேர்ந்த சிறுபான்மை தேசிய இனத்தினரின் நலன்கள் புறக்கணிக்கப்படாமல் இருப்பதற் குரிய அடிப்படை இருக்கின்றது. ஒருங் கிணைந்த சென்னை மாகாணத்தின் தென்பகுதி யிலும் தென் கிழக்குப்பகுதியிலும் தமிழ்பேசுபவர் தொகை 1·75 கோடியாக (1921) இருந்தது. மொழிவழி மாநிலப்பிரிவினை ஏற்பட்டபின் தமிழ்நாட்டில் தமிழ்பேசும் மக்கள் தொகை 63 சதவீதமாகவும் அயல்மொழிகள் பேசும் மக்கள் தொகை 37 சதவீதமாகவும் (1981) இருக் கின்றன.

ஆந்திர மாநிலத்திலும் கேரளத்திலும் முறையே தெலுங்கு, மலையாளம் பேசும் மக்கள் தொகை 85 சதவீதமாகயுள்ளது (1981) என அறிகிறோம். தமிழ்நாட்டில் தமிழ்பேசுவோர் 63 சதவீதமே. இது இன்றைக்கு ஏற்பட்டதன்று தமிழ்த்தேசிய இனம் நீண்டகாலமாக ஏனைய தேசிய இனங்களுக்கு அடிமைப்பட்டிருந்த நிலை யோடு இதைக் காணவேண்டும். களப்பிரர் காலம் முதல் பல்லவர் காலம் வரையிலும் பிற்காலச் சோழர் காலத்திற்குப்பின் ஏற்பட்ட நாயக்கர், முஸ்லீம்கள், மராட்டியர், ஆங்கி லேயர் ஆட்சிக் காலங்களிலும் தமிழ்த் தேசிய இனம் அடிமைப்பட்டிருந்தது.

இத்தகைய காலங்களில் தமிழ்ப்பகுதிகளில் உள்ள பொருளாதாரத்தையும் அரசியலையும் நிர்வகிக்க இங்கு பல குடியேற்றங்கள் நிகழ்ந் தேறின. அரசதிகாரத்துடன் நடந்தேறிய இத்தகைய குடியேற்றங்கள் பரம்பரை பரம்பரை யாக இந்தப் பகுதிகளிலே தொடர்ந்து பெருத்தன. குறிப்பாக நாயக்கரும் கருநாடகரும் ஆண்டபகுதிகளில் இவை அதிகமாக நடந் தேறின. தெலுங்கு மற்றும் கன்னடம் பேசு கின்றன கம்மா நாயுடு, ரெட்டியார், பலிஜா நாயுடு, தேவாங்குச் செட்டி, கோமுட்டிசெட்டி, பேரிசெட்டி ஆகிய பிரிவினர் தொடர்ந்து தமிழ் பேசும் பகுதிகளில் இருந்தனர்.

இவர்கள் அனைவரும் பார்ப்பரைல்லாதார். இவர்களையும் தமிழர்களையும் இணைக்கக் கூடிய அடையாளமாக திராவிடர் என்ற இனக் குறியீட்டுச் சொல் பயன்படுத்தப்பட்டது. இது தமிழ் பேசும் பகுதிகளில் உள்ள சிறப்பு நிலை யைக் கருதியதாகும்.

ஆக, திராவிடர் என்பது, பார்ப்பனர்- தீண்டத்தகாதார் இல்லாத தமிழர்களைக்குறிப்ப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோடு தமிழ்பேசும் பகுதிகளில்' உள்ள திராவிட இனத்தைச் சேர்ந்த சிறுபான்மை மொழிபேசும் தேசிய இனத்தினரையும் குறிக்கிறது.

திராவிடர் என்பதில் உள்ள இத்தகைய சிக்கல்களை மனதிற்கொண்டு சி என் அண்ணா துரை புவியியல் அரசியல் கண்ணோட்டத்துக்கு (Geo Political outlook) முதன்மை கொடுத் தார். திராவிடர் என்பதை நீக்கி திராவிட என்பதை அண்ணாதுரை பயன்படுத்தியுள்ளார். ஏறத்தாழ இந்த நிலையை திராவிடர் கழகத்தில் அண்ணாதுரை பணியாற்றிய கடைசி ஆண்டு களில் காண இயலும். 17 ஆவது தி க. மாநில மாநாட்டின் தீர்மானத்தில் (எண் 2/29-9-45) 'திராவிட நாட்டிலுள்ள மக்கள் யாவரும் சாதி, வகுப்பு அவை சம்பந்தமான உயர்வு தாழ்வு இல்லாமல்' சமத்துவ நிலை பெறச் செய்வதே லட்சியமாகக் குறிக்கப்படுள்ளது. இதற்கு முன்புள்ள தீர்மானங்களில் திராவிடர் என்று குறிக்கப்பட்ட நிலை சற்று விரிவடைந்து திராவிட நாட்டில் உள்ள மக்கள் யாவரும் என்ற நிலைக்கு வந்துள்ளது.

இனவழிப்பட்ட நிலையிலிருந்து புவியியல் அரசியல் நிலைபாட்டுக்கு வருவதற்கான தொடக்கமாகவே இதைக் காண வேண்டும். எனினும் இதை அழுத்தமாக அண்ணாதுரை முன்வைக்கிறார் தி.மு.க.,வின் தொடக்கவிழாக் கூட்டத்தில் (சென்னை இராயபுரம்இராபின்சன் பூங்கா, 15 9-49) அவரது உரையின் ஒரு பகுதி வருமாறு:

''இந்த மண்ணுக்கு நன்றியுள்ளவர்களாக நடந்து கொள்ளும் எந்த இனத்தவரும் இன்ன லின்றி இன்பவாழ்வு வாழப் பணியாற்றுவதே நம் கட்சியின் இலட்சியமாக இருக்க வேண்டும். திராவிடம் முழுமைக்கும் நன்மைகள் உண்டாக நாம் பாடுபட வேண்டியிருப்பதால் திராவிடர் முன்னேற்றக் கழகம் என்பதைவிட திராவிட முன்னேற்றக் கழகம் என்று கட்சிக்குப் பெயர் இருப்பதே எல்லா வகையிலும் பொருந்தும்.''

தி.மு.க. நிறுவனரின் புகழ் வாய்ந்த இந்தக் கூற்று, திராவிடத்தில் உள்ள அனைத்து இனத் தவர்க்கும் இன்பவாழ்வுக்கு உத்திரவாதம் தருகிறது. தி.க. வின் மாநாட்டுத் தீர்மானத்தில் (எண் 2/29-9-45) திராவிட நாட்டில் உள்ள மக்கள் என்றுதான் உள்ளதே தவிர திராவிடத் தில் உள்ள அனைத்து இனத்தினரையும் அது குறிப்பதாக இல்லை. இந்த விதத்தில் தி.க.விட மிருந்து தி.மு.க., ஒரு மாபெரும் விலகலாக உள்ளது. மொழி வாரி மாநில அமைப்பை ஒட்டியும் 1947க்குப்பின் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகளை ஒட்டியும் எழுந்த பல்வேறு அரசியல் யதார்த்த சூழல்களைத் தி.மு.க., கணக்கில் எடுத்துக் கொண்டது அது தமிழ்த் தேசிய இனத்தில் உள்ள அனைத்து இன மக்களின் பிரதிநிதியாகத் தன்னைப்படிப்படியாக உருமாற்றிக் கொள்ள முனைந்தது. ஆரிய-திராவிட இனத்தவர்களின் இன்பவாழ்வுக்காகப் பாடுபடுவதை இலட்சியமாகக் கொண்ட தி மு.க 'திராவிடத்தைத்' தன் பெயரில் கொண்டு 'திராவிடரை' உதறித் தள்ளியது. நீதிக்கட்சி தன் பெயரில் கொண்டிருந்த தென்னிந்தியக் கண்ணோட்டத்தை தி.மு க. தன் இலட்சியங்கள் சிலவற்றில் கொண்டிருந்தது.

''தென்னாட்டு மக்கள் மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்டு ஒரு திராவிட சமதர்ம ஜனநாயகக் குடியரசுக் கூட்டாட்சி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நமது இலட்சியம்''

''வட நாட்டு ஏகாதிபத்தியத்தினின்று விடு தலை....'' இத்தகைய கருத்துப் போக்கின் வளர்ச் சியால் இந்தியதடுமாறிமயமாதலின் உருவாக்கந் தைப் படிப்படியாகக் காண இயலும். இதற்கு தி.மு க..வின் பாராளுமன்றத் தேர்தல் பங்கெடுப்பும் அதன் வழி கிடைத்த பதவி சுகமும் உறுதுணை செய்தன. இந்திய மயமாதலுக் குரிய கொள்கைக்கூறு தொடக்கத்தில் இருப் பினும் பின்னாளைய நிலைபாடுகளும் அதன் வழி ஏற்பட்ட நடைமுறைச் சமரசங்களும் இதைத்துரிதப்படுத்தியது. திண்ணையில் படுத் தாவது திராவிட நாட்டைப் பெறுவோம் என்ற உறுதியில் இருந்த தி.மு.க., நாட்டுப் பிரிவினை கோருபவர்கள் தேர்தலில் நிற்கத்தடை செய்யும் சட்டம் இயற்றப்பட்டவுடன் (1963) தன் கொள்கையைக் கைவிட்டதை வெறும் பிழைப்பு வாதமாக மட்டுமே காண முடியாது. ஏற்கெனவே இருந்த இந்தியமயப்போக்கைப் பிழைப்புவாதம் துரிதப்படுத்தியது. சூன் 8,1961 இல் தன் இலட்சியத்தை மாற்றிக் கொண்டது.

''இந்திய அரசுரிமை, ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள் இயன்ற அளவு கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட திராவிடக்கூட்டமைப்பை நிறுவுவ தாக'' மாற்றுக் கொண்டது. 1957 மற்றும் 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல் களில் வெற்றி பெற்ற தி.மு,க. வேட்பாளர்கள் பதவியேற்கும் பொது இவற்றை ஒப்புக்கொண்ட பின் அதன் தொடர்ச்சியாகவே 1963 மாற்றம் இருந்தது. 1989 இன் இறுதியில் அரசியல் கட்சிகள் தம் சட்டதிட்டத்தில் இந்திய ஒருமைப் பாட்டைக் காக்க வேண்டும் என்பதை இலட்சிய மாக இணைக்க வேண்டும் என் மத்திய அரசு ஆணையிட்டவுடன், தி. மு. க. அதைத் தன் சட்ட திட்டத்தில் ஏற்றுக் கொண்டது. இவை யெல்லாம் இந்திய மயமாதலின் அழுத்தமா... அறிகுறிகளாகும். இன்றைக்கு மத்திய அரசிலேயே தி.மு.க. பங்கேற்கும் பொழுது இதை அதிகமான எடுத்துக் காட்டுகளுடன் விளக்க வேண்டிய அவசியம் இல்லை. திராவிட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கழகத்திடமிருந்து வேறுபடக் கூடிய இரண்டு அம்சங்கள் தி.மு.க. வின் நிறுவனக்காலம் முதல் தொடர்ந்து உள்ளது. அனைத்து இனப் பிரதிநிதித்துவ முயற்சியும் அனைத்திந்திய மயமாதல் போக்கும் உள்ளன. இவை சரியா தவறா என்று விவாதம் இங்கு நமக்கு வேண்டியதில்லை. இவை திராவிட என்ற விளக்கத்திலிருந்து படிப்படியாக உருவாகி வந்தவையாகும்.

இந்த இரண்டு அம்சங்களும் அண்ணாதுரையின் அரசியல்சித்தாந்தத்தில் உள்ளார்ந்து உள்ளன. இந்த இரண்டு அம்சங்களையும் நாம் அ.இ அ.தி.மு.க. வில் காண இயலும் முதலில் இது அ. தி. மு. க. (1972 அக்டோபர்) எனத் தொடங்கப் பட்டிருப்பினும் பின் அனைத்திந்திய ஒட்டுடன் (1976) பெயரிடப்பட்டது. இதில் உள்ள அனைத்திந்திய, திராவிட என்ற தொடர்கள் ஒன்றுக்கு ஒன்று முரனுவதாக உள்ளன என்று சிலர் தவறாகநினைக்கின்றனர். எப்பொழுதும் போல் திராவிட என்பது தமிழகமே. அனைத்திந்தியத் தன்மையை ஒப்புக் கொண்டு, தமிழகப்பகுதிகளில் உள்ள அனைத்து இன மக்களின் இன்ப வாழ்வுக்கு உத்திரவாதம் தரக் கூடியதை இது குறிப்பிடுகிறது. அனைத்து இனத்திருக்குமான இன்ப வாழ்வின் அடையாளமாகவே இதன் அமைச்சரவையில் பார்ப்பனரும் பங்கேற்றிருந்தனர். இதன் தொடர்ச்சியாகவும் நீட்சியாகவும் இதன் தலைமையிலேயே பார்ப்பனர்களைக் காண முடிகிறது. திராவிடக் கட்சிக்கு ஆரியத் தலைமையா என்ற கேள்விக்கு இங்கு இடமில்லை. அதற்கான தத்துவத் தளம், திராவிட இயக்கத்தின் சித்தாந்த வாதியான அண்ணாதுரை அவர்களாலே 1949 - இல் இடப் பட்டுள்ளது.மேலும், திராவிட என்ற ஒட்டுக்கான அடித்தளம் தொடர்ந்து இருப்பதனால் தமிழர் களுக்கான இயக்கமாக இருப்பினும் தமிழ் நாட்டில் உள்ள ஏனைய சிறுபான்மை தேசிய இனத்தினர் இயக்கத்தில் பங்கேற்கவும்-சாத்தியமானால் தலைமைக்கு வரவும் இயலுகின்றது.

பெயர் ஒரு குணத்தை நேரடியாகவோ எதிர் மறையாகவோ அடையாளப்படுத்துகிறது. திராவிட இயக்கத்தின் பெயரிடலில் ஏற்பட்ட பல்வேறுமாறுபாடுகள்அதன்பிரிவுகளின்அரசியல் நிலைபாடுகளை ஏதேனும் ஒருவிதத்தில் வெளிப் படுத்துகின்றன. நீதிக் கட்சித் தெலுங்கர்கள் தம் இயக்கப் பெயருடன் திராவிடர் என்ற முன்னொட்டை விரும்பவில்லை; நீதிக் கட்சித் தமிழர்கள் அதைவிரும்பியுள்ளனர். நீதிக்கட்சிக்கு உள்ளும் புறமும் தமிழர்களின் சமூகப் பொருளியல் ஆற்றல் மிகக் குறைவாகவே இருந்த காலங்களில் இங்குள்ள பிராமணர்களை எதிர்க்கப் போதிய பலமின்மையால் திராவிடர் கவசம் தேவைப்பட்டது. திராவிடர் கழகம் என்று பெயரிடப்பட்ட காலத்தில் தமிழகப் பகுதிகளில் ஆலை முதலாளியத்திலும் வணிக முதலாளியத் திலும் விவசாயத்திலும் தமிழர்களும் வளமாக இருந்தனர். இவர்கள் பிராமண நிலப்பிரபுத்து வத்துடனும் பிராமண முதலாளித்துவத்துடனும் பிராமண அதிகாரத்துவத்துடனும் மோதுவதற் குரிய வலுவைப் பெற்றிருந்ததனால் தென்னிந் தியப்பிராமணரல்லாதார் என்ற மறைமுக அடையாளப்படுத்துதல் (indirect identification) உதற விரும்பினர். ஆனால் சிறுபான்மைத் தேசிய இன நாங்கள் குறிப்பாக தெலுங்கர்களும் கன்னடரும்—கட்சியிலும் தமிழ்பேசும் பகுதி களிலும் செல்வாக்குடன் இருந்ததனாலும் தமிழர்கள் என்றால் தமிழ் பேசும் பார்ப்பனர்கள் இணைய வாய்ப்பு உள்ளதாலும். திராவிடர் என்ற பெயர் சூட்டிக் கொள்ளப்பட்டது. இந்த நிலைபாட்டிலிருந்து விலகி புவியியல் அரசியல் ரீதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரிடப்பட்டது. இந்தியாவில் 1950களுக்கு முன்னும் பின்னும் தோன்றிய மொழிவழி மாநில அமைப்பு முறையில் வரலாற்று ரீதியாக ஒரு மொழிப் பிரதேசத்தில் பல இனங்களும் தேசிய இனங்களும் கலந்து இருக்கின்ற சூழலை தி.மு,க. கணக்கிலெடுத்துக் கொண்டது. நீண்ட காலமாகவே அடிமை நிலையில் இருந்த தமிழகப்பகுதிகளில் ஆரிய இனத்துக்கும் தமிழரல்லாத தேசிய இனங் களுக்கும் உரிய மதிப்பு கணிசமானது. இந்தக் குறிப்பான தன்மையைத் தி.மு.க, கணக்கி லெடுத்துக்கொண்டே திராவிடரை உதறி திராவிட என்பதை ஏற்றுக் கொண்டது. இதன் தொடக்க நாள்களில் இருந்த இந்தியத்தன்மை, இதன் பிழைப்புவாத அடிப்படையிலான பாராளு மன்றவாதப் போக்கின் ஊடே அழுத்தமாயிற்று. அனைத்து இனங்களுக்கான தன்மை, அனைத் திந்தியத்தன்மை ஆகிய இரண்டு அம்சங்களின் அழுத்தமானபதிப்பே, அ.இ.அ.தி.மு.க. ஆகும்.

திராவிட இயக்கம், காங்கிரசுக் கட்சிக்கு ஒரு மாற்றாக (Alternative) மாறியதற்கான கூறு களும் இவற்றில் அடங்கியுள்ளன. பாராளு மன்றப்பாதையில் இதற்கான யுத்ததந்திரத்தை வகுத்தளித்தவர் அண்ணாதுரை அவர்களே. அது காங்கிரசுக்கு மாற்றாக ஆக்கியதே தவிர அதற்கு எதிரிடையாக (opposite Force) ஆக்க வில்லை. இது காங்கிரசின் சமூக அடித்தளத் தையும் திராவிட இயக்கத்தின் சமூக அடித்தளத் தையும் ஒன்றாகவும் ஆக்குகிறது. ●

## அறிவிப்பு

நவம்பர் இதழ் வெளிவரவில்லை என்பதை அறியத்தருகிறோம். நவம்பர்—டிசம்பர் இதழாக இவ்விழை வெளியிடுகிறோம்.

—நிர்வாகி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகங்களும் முகங்களும்

சு. வில்வரத்தினம்

வெடிகள் சிதறும் ஒலிகள்
வேடிக்கை தெருவெல்லாம்
என்ன வெளியே?
எட்டிப் பார்த்தேன்.

தேர்தல் வெற்றித் திருவிழா ஊர்வலம்.

நம்மவர்,
மேளங் கொட்டுகிறார், குதிக்கிறார் விழுகிறார்.
கோஷம் போடுவார்
நடுவே
கோடியுடுத்த மாப்பிள்ளையாக
மா. அ. சபைத் தலைவர் வருகிறார்
மாலை மரியாதையுடன்.

வெட்கம் கெட்டவர்கள்!
வேற்றார் இட்ட நெருப்பின்
வெக்கை தணிந்து இன்னும்
சாம்பல் அள்ளவில்லை.
தூர்ந்து போன தேசத்தை
தூக்கி நிறுத்த தோள் கொடுப்பாரில்லை.
அதற்குள்
தேர்தல் வெற்றி ஊர்வலம் வருகிறார்.

58 இல் தொடங்கி அடுத்தடுத்து
அடிவிழுந்த பின்னாலும்
என்ன செய்தார் இவர்கள்?
அடித்தாரைச் சொல்லி
அழுதழுது வாக்குப் பெற்றார்.
கூட்டுச் சேர்ந்தும் கொள்கை முழக்கி
வெற்றிகள் குவித்தார்.

தேர்தல் எனும் வேசி
விடுதலைக் குழந்தை ஈவாள் எனச் சொல்லி
பாராளுமன்றத்தில் 'கூடல்' செய்தார்.
மாவட்டந் தோறும் தங்கு மடங்கட்ட
முண்டு கொடுப்போம் என்றார்.

தேர்தல் பந்தல் சோடனைகள்
ஒருபுறம் நடக்க மறுபுறம்
தீண்டிற்றே நெருப்பு.

77 இன் எரிதழற் காயங்கள் ஆறுமுன்னம்
மீண்டும் எரிநெருப்பில் தமிழ் ஈழம்.

காக்கி உடைகளும் காடையர் கூட்டமும்
கூட்டுச் சேர்ந்து கொள்ளி வைத்தார்
எரிமலைப் பிரதேசம் போல்
எல்லாமே நாசம்.

தற்காத்துக் கொள்ளத் தகுதியிலாத்
தமிழரெல்லாம் ஒப்பாரி வைக்கிறார்;
விடுதலை பெற வியலாத
மலட்டுத் தலைவரெல்லாம் இன்னும்
பாராளுமன்ற ஒட்டுண்ணிகளாய்
பதவிகளை உதறாமல்
பகிஷ்கரிப்பு 'ஊடல்' செய்வார்.

பதவிகளை உதறி எறிந்திருந்தால்
உலகின்
மனச்சாட்சியையே உலுப்பியிருக்காதா?
எமைச் சுற்றி நாமிட்ட
வேலிகள் நகர்ந்து
விடுதலைக்கு ஒரு வழி திறந்திருக்காதா?

ஆனால்,
எதை உதறினாலும் பதவிகளை உதறோமென
தோளிலிட்ட துண்டுகளை எடுத்து உதறியவாறு
இதோ வருகிறார் தலைவர் ஊர்வலமாய்,
சவக்காட்டில் வெற்றிச் சங்கதி.

அதிலென்ன?
இன்றைய இடிபாடுகளை நாளைய தேர்தலுக்கு
படிக் கற்களாக்கும் பயன் தெரிந்தவர்கள்
அவர்கள்

பயணம் தொடரட்டும்!

www.tamilarangam.net

# கவிதை கவிஞன் நான்

விக்ரமாதித்யன்

யோசித்துப் பார்க்கையில், நான் எப்படிக் கவிஞன் ஆனேன் என்று எனக்கே இன்னமும் விளங்கவில்லை; தற்செயல் என்று சொல்லிவிட முடியாது; அதேசமயம், திட்டமிட்டு வளர்த்துக் கொண்டது என்றும் கூறமுடியாது. அடி நாட்களிலிருந்து அலசி ஆராய்ந்தால், ஏதாவது கிடைக்கும் என்று தோன்றுகிறது.

வார்த்தைகள் என்னை எப்போதுமே மயக்கிக் கொண்டுதான் இருக்கின்றன; சிறுவயதில் இந்த மயக்கம் அதிகமாகவே இருந்திருக்கிறது; இந்த வார்த்தைக் காதலே தொடக்கம் என்று சொல்லவேண்டும்.

''சின்னஞ்சிறு கண்மலர்
செம்பவள வாய்மலர்
சிந்திடும் மலரே ஆராரோ
வண்ணத்தமிழ்ச் சோலையில்
மாணிக்கமாலையில் ஆராரோ
அன்பே ஆராரோ....''

என்று தொடங்கும் தாலாட்டுப் பாடல்; நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்த 'பதிபக்தி' படம்; சாவித்திரி தன் குழந்தையைத் தொட்டிலிட்டுத் தாலாட்டுவதாகக் கட்டம் (காட்சி).

''பாப்பா உன் அப்பாவைப்
பார்க்காத ஏக்கமோ
பாய்ந்தே மடிதனில்
சாய்ந்தால்தான் தூக்கமோ
தட்டாமல் வந்துனை
அள்ளியே அணைப்பார்
தாமரைக் கன்னத்தில்
முத்தங்கள் விதைப்பார்
குப்பைதனில் பிறந்த குண்டுமணியே
கண்ணே ஆராரோ அன்பே ஆராரோ
ஏழை என் நிலையை
எண்ணி வந்தாயோ
எதிர்கால வாழ்வில்
கவனம் கொண்டாயோ
நாளை உலகம்
நல்லோர்கள் கையில்
நாமும் அதிலே
உயர்வோம் பின்னாலே
மாடிமனை வேண்டாம்
கோடி செல்வம் வேண்டாம்
வளரும் நிலவே நீ போதும்....''

என்றெல்லாம் பாடல் வரிகள் வரும்.

[நினைவிலிருந்து எழுதுகிறேன்; சரியான வரிகளுக்குப் 'பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள்' புஸ்தகத்தைப் பார்க்கவும்.]

எங்கள் வீட்டில், எனக்குப் பின்னால் உள்ள தம்பிகளைக் கவனிக்கிற பொறுப்பு அக்காவுக்கு இருந்து வந்தது; தம்பியைத் தூங்கப் பண்ணுவதற்கு அக்கா பாடுகிற தாலாட்டுப் பாட்டு இதுதான்; அடிக்கடி இந்தப் பாட்டை படித்துக் கேட்டிருக்கிறேன்; என் மனசில் ஆழப் பதிந்து விட்ட வரிகள் இவை. பட்டுக்கோட்டையின் பாடல் இது என்பது எனக்கு பின்நாள்களில் தான் தெரியும்.

''நெஞ்சம் அலைமோதவே
கண்கள் குளமாகவே
கொஞ்சும் ராதை
கண்ணனைப் பிரிந்தே போகிறாள்...''

என்று தொடங்கும் ஒரு பாடல்; 'இரு சகோதரிகள்' படம் என்று ஞாபகம்.

தாங்கள் வசித்து வந்த ஊரிலிருந்து கதாநாயகியின் குடும்பம்—வீட்டைக் காலி செய்துவிட்டு—வேறு ஊருக்குப் போகிற கட்டம்; கதாநாயகியும் அவள் அம்மாவும் குதிரை வண்டியில் ரயில் நிலையத்துக்குப் போவார்கள்; கதாநாயகனுக்கு இவளின் பிரிவு தெரியாது; இவளுக்கு அவனிடம் சொல்லிக் கொள்ளக்கூட அவகாசம் கிடைத்திருக்காது; இவளுடைய காதலும் வீட்டுக்குத் தெரியாது; மனசுக்குள் மருகியபடியே இருப்பாள் தலைவி. பின்னணியில் பிச்சைக்காரன் ஒருவன் பாடுவான். இந்தப் படமே நான் பார்த்த நினைவிருக்கிறது.

அக்காவுக்குப் பிடித்த பாடல்களில் இதுவும் ஒன்று; அநேக தரம் அக்கா படிப்பதிலிருந்தே (பாடுவதைப் 'படிப்பது' என்று சொல்வதே நெல்லை மாவட்ட வழக்கு) இந்தப் பாடல் என் மனசில் பதிந்தது என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். இது யாருடைய பாடல் என்று எனக்கு நிச்சயமில்லை.

முதன் முதலில், சிறுவனாக இருக்கையில், எனக்குக் கவிதை பரிச்சயமானது இந்த வரிகளிலிருந்துதான் என்பதே உண்மை.

''கல்யாண ஊர்வலம் வரும்
உல்லாசமே தரும்
மகிழ்ந்து நான் ஆடிடுவேன்....''

என்ற பாடல்;

''கனவு கண்ட காதல்
கதை கண்ணீராச்சே
நிலா வீசும் வானில்
இருள் சூழலாச்சே....''—என்ற பாடல்;

'பெண்' படம்; வைஜயந்திமாலா கதாநாயகியாக நடித்தது, அப்போது எனக்கு எட்டு—ஒன்பது வயதிருக்கும்.

www.tamilarangam.net



எங்கள் சொந்த ஊர், திருநெல்வேலி; டவுனில் கல்லத்தி முடுக்குத் தெருவில் இருந்தோம் நாங்கள்; பக்கத்தில் உள்ள ராயல் டாக்கீஸிலும் பாப்புலர் தியேட்டரிலும்தான் சினிமா பார்ப்பது; எப்போதாவதுதான் ஜங்ஷன் பாலஸ்-டி-வேல்ஸ்க்குப் போவோம்; ரத்னா டாக்கீஸெல்லாம் பிறகுதான் வந்தது. பாப்புலர் தியேட்டரில்தான் 'பெண்' படம் நடந்தது என்று ஞாபகம். அந்த நாளில் 'பெண்' படப் பாடல்கள் ரொம்ப பிரபலம். இதெல்லாம் கவிஞர் கம்பதாஸன் பாடல்கள் ஒன்று விவரம் தெரிந்த பிறகு தெரிந்து கொண்டேன்.

[கவிஞர் கம்பதாஸன் பாடல்களை சிலோன் விஜயேந்திரன் தொகுத்து, மணி வாசகர் நூலகம் வெளியிட்டிருக்கிறது; ஆர்வமுள்ளவர்கள் வாங்கிப் படிக்கலாம்.]

எங்கள் வீட்டில் நான் இரண்டாவது பையன்; அக்காதான் பெரியவள்; அக்காவுக்கும் எனக்கும் நாலு வயசு வித்தியாசம்; அதனால், படிப்பிலும் சரி, பாட்டு சினிமா, இதுமாதிரி ரசனையிலும் சரி அக்காதான் ஒருவகையில் முன்னோடி என்று சொல்லவேண்டும்.

எங்கள் ஊரில் சிலோன் ரேடியோதான் செல்வாக்கு; அது தமிழுக்கு நிறையச் செய்திருக்கிறது; இன்றைக்கும் நான் வேலையில்லாமல் தென்காசியில் இருக்கிற காலங்களில் எனக்குத் துணை சிலோன் ரேடியோதான்.

எட்டு—ஒன்பது வயதுகளில், குழந்தை மனசாக இருக்கும் போது, நெஞ்சில் இடம் பிடித்துக்கொண்ட இந்த ஈரமான உணர்வு வரிகள்தான் கவிதை என்பதை எனக்குக் காண்பித்துத் தந்தன. இப்போதும்கூட இந்தப் பாடல்களைக் கேட்க வாய்க்கும் போது, எனக்குள் ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டுவிடும்.

கவிஞர் கம்பதாசன் வரிகளுக்கு நிகராக இன்னும் நான் எழுதவில்லை, அல்லது என்னால் எழுத முடியவில்லை. என்ற ஒரு ஆற்றாமைகூட எனக்கு உண்டு.

"ராஜா மலர் ராணி—புது
ரோஜா மலர் மேனி
பேஷாக ஒரு மாமி—வரப்
போனாள் பாரு நாளை...."

என்ற உடுமலை நாராயண கவியின் பாடல்; கே. ஆர். ராமசாமி நடித்த படம்; அவரே பாடுவார்; ராஜாவின் மகளுக்குப் பாடிக் காட்டுகிற கட்டம்; தாயில்லாப் பெண் அது.

"நீலவண்ணக் கண்ணா வாடா
நீ ஒரு முத்தம் தாடா
நிலையான அன்பில்...."
"அமுதை பொழியும் நிலவே—நீ
அருகில் வராததேனோ...."

என்ற கவிஞர் மருதகாசியின் பாடல்கள்.

இப்படி நிறையத் திரைப்படப்பாடல்கள் தான், என் ஆரம்பகாலக் கவிதை அறிமுகம்.

பிறகு கொஞ்சகாலம் கழித்து நான் வீட்டை விட்டு ஓடி நாடோடிச் சிறுவனாகச் சுற்றிக் கொண்டிருந்த சமயம்;

"விந்தியம் குமரியிடை
விளங்கும் திருநாடே
வேலேந்தும் மூவேந்தர்
ஆண்டிருந்த தென்னாடே....
எங்கள் திராவிடப் பொன்னாடே

என்று தொடங்கும் 'மாலையிட்ட மங்கை' படப் பாடல்; எல்லாமே கவிஞர் கண்ணதாசன் பாடல்கள்; 'பாட்டுக்கு ஒரு படம்' என்று விளம்பரம் செய்து வந்த முதல் தமிழ்ப்படம்; இதிலிருந்து தான் கண்ணதாசனின் ரசிகன் ஆனேன் நான்.

முக்கூடல் த.பி. சொக்கலால் ராம்சேட் பீடி கம்பெனியார், அந்த ஊரின் நாராயணசாமி கோயில் பரம்பரைத் தர்மகர்த்தா; வருஷா வருஷம் அங்கே பத்து நாள் திருவிழா நடக்கும்; தினம் ஒரு கலை நிகழ்ச்சி உண்டு.

லலிதா, பத்மினி, ராகினி சகோதரிகள், என்.எஸ்.கே—டி ஏ. மதுரம், டி.கே, ராமச்சந்திரன், கே. ஏ. தங்கவேல் இப்படி அந்தக் காலத்தில் பிரபலமான நடிக—நடிகையர் வருவார்கள்.

ஒரு முறை டி.ஆர். மகாலிங்கம் நடித்த 'ஸ்ரீவள்ளி திருமணம்' நாடகம்; இடைவேளையில், 'மாலையிட்ட மங்கை' படப் பாடல்களை அவர் பாடுவார் என்பதற்காக எட்டு மைல் நடந்துபோய்க் கேட்டுவிட்டு வந்திருக்கிறேன்.

இன்னும் கொஞ்சம் வளர்ந்த பிற்பாடு, கவிஞர் மாயவநாதனைத்தெரிந்து கொண்டேன்; குறிப்பாக, 'பூம்புகார்' படப் பாடல்கள்.

இப்படி திரைப்படப் பாடல்கள் வாயிலாகத் தான் எனக்குத் தமிழ்க் கவிதையைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

என் கவிதைகள் 'Lyrical' தன்மை கொண்டவையாக இருப்பதையும், நான் 'Lyrical poet' ஆகத் துலங்குவதையும் இவ்விதமாகத் தான் எனக்கு விளங்கிக்கொள்ள முடிகிறது இப்போது.

இரண்டு வருஷத்துக்கு முன் ஒரு நாள், 'மிதிலா அச்சக'த்தில், ஒரு சந்தர்ப்பத்தில் என் கவிதைகளைப் பற்றிப் பேச்சு வந்தபோது, நண்பர் மோகன் சொன்னதை இங்கே நினைவு கூர வேண்டியதிருக்கிறது.

"நம்பி... நீங்க ஒரு 'லிரிக் பொயட்'; உங்க கவிதைகளை அப்படித்தான் பார்க்க முடியுது...."

மோகன் சரியாகவே கணித்திருக்கிறார் என்றுதான் படுகிறது. (தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'அம்மா, சீலை உடு....வா....வீட்டபோவம்' வயது மூன்று அல்லது நான்கு இருக்கக்கூடும். ஒரு சிறுவன் நடுத்தர வயதுப் பெண்ணொருத்தியிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான். சிறுவனின் குரலுக்கு நேரடிப் பதிலாக எதையும் கூறாமலே;

'அங்க அந்த அண்ணாச்சியவையோட போய் விளையாடுங்கோ' என்றாள்.

'இல்லை....நா மாட்டன். வாம்மா வீட்ட போவம்'

'இங்க பார்.... லையிற் இருக்கு.... பெரிய வீடு....அண்ணாச்சியவை... சின்ன பபா எல்லாம் இருக்கு.'

அவள் பராக்கு காட்டினாள்.

'என்ர வீட்டை போவம்....எங்கட வீட்ட போவம்....இது வேண்டாம்....எங்கட வீடு... அச்சா வீடு....வாம்மா போவம்' என்றசிறுவனின் கெஞ்சல் மெல்லச் சிணுங்கலாக மாறத் தொடங்கியது.

'சரி.... சரி.... அழாதையுங்கோ.... அப்பா வந்தாப் பிறகு போவம்....' அவள் இசைவாக்கினாள்.

'அப்பா எப்ப வருவார்?' அடுத்த கேள்விக்குத் தாவினான் சிறுவன்.

'பின்னேரம் வந்திடுவார். இப்ப இந்தாங்க ரொபி சாப்பிடுங்க' என்றாள்.

ரொபியைக் கையில் வாங்கியபடியே,

'எப்ப நாங்கள் வீட்ட போறது?' என்றான் சிறுவன்

'அப்பா வந்த உடன் அவரிட்டக் கேப்பம் என்ன'

'எப்ப போறது....சொல்லு' சிணுங்கினான் மீண்டும்.

''அழப்படாது.... எல்லே, சொல்லுறன்.'

'எப்ப வீட்ட போறது.'

'சரி, நாளைக்குப் போவம். இப்ப அழாமல் இந்த ரொபியைச் சாப்பிடுங்கோ.'

'இல்லை....இண்டைக்குப் போவம்....இப்ப போவம்....வா. சீலை உடு....வீட்டை போவம் அம்மா.'

அவனுக்கு என்ன பதிலைச் சொல்லி எப்படி ஆறுதல் படுத்துவது என்பதை அறியாத தாயின் உள்ளம் கண்ணீர் விட்டது. முப்பது நாட்களுக்கும் மேலாக என்னனென்னவோ சொல்லியும் கூட ஆற்றாமல் அந்தப் பிஞ்சு மனம் அரற்றுவது கண்டு அந்தப் பெற்ற மனம் பதறியது. நித்திரையில் கூட 'வாம்மா....வீட்ட போவம்' என்றே அவன் வாய் புலம்புவது கேட்க அவளுக்குச் சகிக்க முடியவில்லை.

ஆனால் யார் தான் என்ன செய்ய முடியும்?

எப்படி இப்போது வீட்டுக்குச் செல்வது சாத்தியமாகும்?

□

I4—6—90

நள்ளிரவு நேரம். திருகோணமலை நகரம் அதிர்ந்தது. சிறிது காலம் ஓய்ந்திருந்த துப்பாக்கிகள் மீண்டும் முழுவேகத்துடன் செயற்படத் தொடங்கின. உயிரைக் குடிக்கும் அசுரத்தனமான ஆவேசத்துடன் சன்னங்கள் பறந்தன.

பட்....பட்....பட படப்பட படீர்....என்ற ஒலியலைகளால் உறக்கம் கலைந்து விழிப்புப் பெற்றனர் மக்கள். அடுத்த சிந்தனைக்கு இடமின்றிக் கையில் அகப்பட்டனவற்றைச் சுருட்டிக் கொண்டு அன்புக்கு உரியவராய் இருந்தவரை அழைத்தபடி மக்கள் மிரண்டோடலாயினர். தீச்சுவாலைகளையும் புகை மண்டலத்தையும் விலக்கியபடி படையினர் கண்களில் பட்டுவிடாமல் தப்பித்து நகரத்தை விட்டு வெளியேறி தம் உயிரையும் மானத்தையும் காத்துவிடத் தெண்டித்த ஆயிரக் கணக்கானோரில் கோபாலனின் குடும்பம அடங்கியிருந்தது.

இளையவன்
இளையவன் **போகுமிடம்**

ஈழத்திலிருந்து ஒரு சிறுகதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோபாலனும் மனைவி சரசாவும் தமது செல்லக் குழந்தையான பிரதீபனை வாரி அணைத்தபடி அந்தகாரம் சூழ்ந்த நள்ளிரவில் திருகோணமலை நகரத்திலிருந்து வெளியேறி இருந்தனர். ஓட்டமும் நடையுமாக நிலா வெளியை வந்தடைந்தபோது சூரியக்கதிர்கள் பூமியில் படர ஆரம்பித்திருந்தது. கடலும், வயலும், காடுகளும் நிறைந்த நிலாவெளியின் இயற்கை அழகை ரசிக்கும் மனோநிலை அவர்களுக்கு இருக்கவில்லை. இலங்கையின் உல்லாசப் பயணிகளைக் கவரும் பகுதிகளில் ஒன்றாக விளங்கும் நிலாவெளி அன்று பல்லாயிரக்கணக்கான அகதி மக்களைச் சுமந்து நின்றது. பாடசாலைகள், ஆலயங்கள், பொது இடங்கள் மட்டுமின்றி மரநிழல்கள் வெட்டை வெளிகளும் கூட அகதி முகாம்களாக மாற்றம் கண்டிருந்தன.

□

அரக்கப் பரக்க விழுந்தடித்துக் கொண்டு வந்த கோபாலன் 'ஆறாம் கட்டைச் சென்றியையும் ஆமி உடைச்சுப் போட்டானாம். இனி இங்கையும் இருக்கேலாது. வெளிக்கிடுங்கோ. போவம்' என்றான் மூச்சிரைத்தபடி. முந்திய இரவின் உறக்கம் கலைந்த சோர்வும், நடந்த களைப்பும் பெரியவர்களைக்கூட அயர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தது. பிரதீபனும் நன்கு உறங்கிக் கொண்டிருந்தான். திடீரெனத் தாய் வாரி அணைத்தபடி இயந்திர கதியில் நடக்கத் தொடங்கியதும் அவனுக்கு நித்திரை கலைந்து சினம் பொங்கியது. அவன் குரலெடுத்துக் கதறத் தொடங்கினான்.

'சத்தம் போடப்பட்டது. ஆமி வருகுது. சுடுகிறான். ஷெல் அடிக்கிறான்.' என்று விறைத்த குரலில் முறைத்த பார்வையுடன் கோபாலன் கூறவும் ஏதும் உணர்ந்து கொள்ள முடியாத பிரதீபன்அழுகையை அடக்கிக்கொள்ள சிரமப்பட்டான்.

விக்கலும் சிணுங்கலுமாக இருந்த பிரதீபன் 'எங்க அம்மா போறம்' என்றான்.

என்ன பதில் சொல்லுவது எனத் தெரியாத அவளோ 'இப்ப அழக்கூடாது. முல்லைத் தீவுக்கு மாமா வீட்ட போவம்' என்று முணுமுணுத்தாள்.

அருகாக நடந்துவந்த ஒருத்தி இந்த உரையாடலைக் கேட்டதனால் 'முல்லைத்தீவிலை உங்களுக்குச் சொந்தக்காரர் இருக்கினமோ?' எனக் கேட்டாள்.

'இருந்தவைதாள். இப்ப அங்கயும் என்ன பாடோ, ஆருக்குத் தெரியும்,' எனச்சுருக்கமாகக் கூறினாள்.

'எப்பிடிப் போகப் போறியள்.' அவள் அடுத்த கேள்விக்குத் தாவினாள்.

'தெரியேல்ல. அவரிட்டத்தான் கேக்க வேணும்' என்றாள் ஒருமாதிரிப் பார்வையுடன்.

'இல்ல, செம்மலை, அளம்பில் பக்கம்எங்கட ஆக்கள் இருக்கினம். நாங்களும் அங்கதான் போகப் போறம்.

புடவைக்கட்டுப் போய் போட்டிலை (படகு) போறதெண்டா எங்களிட்ட காசில்லை. நாங்கள் திரியாய் போய் காட்டுப் பாதையால நடந்து ஜான் ஓயாவைக் கடந்து கொக்கிளாய் போய்த் தான் போக வேணும். அதுதான் எங்களோட ஆரும் கூட வராக்கள் இருக்கினமோ என்று அறியத்தான் கேட்டனான்'. என நீட்டி முழக்கிக் கூறினாள்.

பிரதீபன் 'ஏன், அம்மா மாமா, வீட்ட போறம்? எங்கட வீட்ட போவம் வாம்மா.' என்றான் சிணுங்கல்களுக்கிடையே.

நீலக்கடலலைகள் தாலாட்டும் திருகோணமலைக்கு இப்போது திரும்பிச் செல்ல முடியாது என்பதை அந்த பிஞ்சு மனதிற்கு எப்படி விளங்க வைக்க முடியும். எங்கள தெருக்களில நாங்கள் திரியவும், எங்கள் வீட்டு முற்றத்தில் நாங்கள் குந்தியிருந்து மகிழ்ந்து விளையாடவும் இயலாத இக்கட்டான சூழலை எப்படி அவனுக்குப் புரிய வைக்க முடியும். அதனால தானோ என்னவோ அருகருகாக கேட்கும் ஷெல்லடிச் சத்தங்களையும் கடலில் நிற்கும் பீரங்கிப் படகுகளையும் சுட்டிக் காட்டி 'இப்ப அங்கயெல்லமம் சண்டை நடக்குது, நாங்கள் போனா ஆமி சுடும்' என விளக்கம் கூற முற்பட்டாள். இந்த விளக்கத்தை ஏற்க மறுத்த தால் போலும் பிரதீபன் மீண்டும் அழத் தொடங்கினான்.

சரசா கோபாலனிடம் பிரதீபனைக் கொடுத்தாள்.

□

நிலாவெளியிலிருந்து புறப்பட்டு கும்புறுப்பிட்டி— குச்சவெளியைச் காட்டுப் பாதை வழியாய் கடந்து கல்லம்பத்தை ஊடாக திரியாயை அடைய ஒரு நாள் பொழுது கழித்து போயிற்று. மீண்டும் நடக்கத் தொடங்கி ஜான் ஓயாவைக் கடந்து கொக்கிளாய் வழியாக செம்மலையை அடைய சுமார் நான்கு நாட்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நகர்ந்து போயிற்று. முறையான உணவோ, குடிக்கப் போதுமான தண்ணீரோ, சரியான ஓய்வோ கிடைக்காமல் இந்த நாட்களைக் கழிக்கப் பட்ட சிரமங்கள் சொல்லுந்தரமன்று பச்சை இலைகளைக் கடித்துப் பசியைப் போக்கி—மரநிழல்களின் கீழ்தங்கி ஓய்வு எடுத்து காட்டு விலங்குகளுக்கும் படையினரின் வேட்டுக்களுக்கும் அஞ்சி ஒடுங்கி செம்மலையை அடைந்தபோது ஒருவாறு நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது. ஆனாலும் இந்த நிலை எத்தனை நாட்கள் நீடிக்கும் என்பதையோ இனி திருகோணமலைக்குத் திரும்ப முடியும் என்பதையோ எவராலும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. உணவுப் பண்டங்களின் தட்டுப்பாடான நிலையும் தங்குமிட வசதிக் குறைபாடான நிலையும் உந்தித் தள்ள மீண்டும் பயணத்தை ஆரம்பித்து சுமார் நாற்பது மைல்களுக்கும் மேலாக நடந்து புதுக்குடியிருப்பு என்னும் இடத்தை வந்தடைந்த ஏராளமானோரில்கோபாலனின் குடும்பமும் இருந்தது.

☐

இத்தனை நீண்ட பயணத்தின் அடிப்படைத் தார்ப்பரியத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவமில்லாத பிரதீபன் மீண்டும் ‚அம்மா சீலை உடு....வாம்மா விட்ட போவம்....என்றே அடம் பிடித்துக் கொண்டிருக்கின்றான்.

'இங்க பார்....பூமரம்....காடு ...அண்ணாச்சியவை. தம்பிபவா....பெரியவீடு ...கார்....டிராக்டர்' என்று என்னவெல்லாமோ பாராக்குக் காட்டிய போதிலும் ஒவ்வொரு முறையும் சரசா தன் முயற்சியில் தோற்றுப் போக ...பிரதீபன் அழுது அடம் பிடிக்க...கோபாலன் தன் இயலாமையால் எழும் கோபத்தை அடக்க முறைத்துப் பார்க்க இப்படியே நாட்கள் நகரும். ஆனால்என்றாவது ஒருநாள் பிரதீபன் தன் வீட்டைச்சென்றடையும் வரை அவன் மனம் ஓயப்போவதில்லை என்பது மட்டும் நம்பிக்கையானது ★

**மீண்டும் கைது**

☐ தமிழகத்தில் தங்கியுள்ள ஈழப் புலிக்களுக்கெதிராக இரண்டாம் கட்ட நடவடிக்கை ஓரிருதினங்களில் மேற்கொள்ளப்படும் என மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபேத் காந்த் சகாய் அறிவித்தபடி அகதி முகாம்களில் தங்கியிருந்த 52 ஈழப்போராளிகளை போலீசார் புதனன்று தேடிப்பிடித்தனர். ஏற்கனவே பிடிபட்ட 167 போராளிகள் வைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம்களில் இவர்களைச் சேர்த்தனர்.

(தினமணி, 20—12—90)

## காற்றே நீ தாலாட்டு

நீண்ட மௌனத்திற்குப் பிறகு
இந்த மரம்
காற்றின் தாலாட்டுக்கு
தொட்டிலாகும்.
தன்
நிறைவேறா.... கனவுகளுக்கு
வடிவம் காணும்.

உன் முக வெளி
கவிதைகளை
இன்னும் தெளிவாகக் காட்டு.
மறைந்து கிடக்கும்
இரகசியப் பூக்களை
பூக்க விடு.
முகவரி சரியாகத் தெரிந்தால்
நான் தவறவிட மாட்டேன்.
கடிதங்கள் தொலைந்து போகாது:

காற்றே!
நீ தாலாட்டு!
என் கனவுகளை
புதிது புதிதாய் கண்டெடு.
என் சித்திரங்களில்
உன் முகம் பார்:

மனிதன்,
தனித்தியங்க முடியாது.
தனித்துப் பாட முடியாது.
என் தொட்டிலை
நானே; ஆட்ட முடியாது.

காற்றே!
நீ தாலாட்டுவதும்,
தாலாட்டப்படுவதும்
இன்பமானது.

மரங்களோ, நதிகளோ
செடிகளோ, கொடிகளோ
இல்லையெனில்
நீ தனித்து
சலசலக்க முடியாது.
நானும்,
கலகலப்பாய்
சிரிப்பலை எழுப்ப முடியாது!

காற்றே! நீ
தாலாட்டு!
என் மௌனமும்,
தனிமையும்
கரைந்து போகும்வரை
காற்றே! நீ
தாலாட்டு.

**வண்ணச்சிறகு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மார்க்சியம் தோற்கவில்லை;

## நெருக்கடிக்குள்ளாகியிருப்பது

### 'அறியப்பட்ட' மார்க்சியமே

சோசலிசக் கட்டுமானம் தோற்றுவிட்டது எனச் சொல்பவர்களும் சோசலிசக் கட்டுமானம் சரியாகக் கடைபிடிக்கப் படாததே இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணம் என்று சொல்பவர்களும் சோசலிசக் கட்டுமானம் என்பது குறித்து ஒரே கருத்துடையவர்களாக இருக்கின்றனர். இவர்களது வரையறையின் படி சோசலிசக் கட்டுமானத்தின் பிரதான அம்சங்கள்:

(அ) உற்பத்திச் சாதனங்களில் தனியுடமை ஒழிக்கப்படுதல்.

(ஆ) மையப்படுத்தப்பட்டத் திட்டமிடுதலின் கீழ் முதலாளியத்திற்குச் சமமாக உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி; அரசியலை ஆணையில் வைத்தல், வேலை இல்லாத் திண்டாட்டம் /பணவீக்கமின்மை, அடிப்படை வசதிகள் அனைவர்க்கும் அளிக்கப்படுதல்.

(இ) உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக் கொள்ளுதல்; வெளிநாட்டுவணிகத்தில் அரசு ஏகபோகம்.

(ஈ) பாட்டாளி வர்க்கச் 'சர்வாதிகாரம் என்கிற பொதுவுடமைக் கட்சியின் மேலாண்மையிலான ஒரு கட்சி ஆட்சி முறை. கருத்து வேறுபாடுகளுக்கு இடமின்மை.

(உ) வர்க்க சர்வாதிகாரம் என்கிற வகையில் எல்லோருக்கும் சமமான அடிப்படை உரிமைகள் என்கிற கருத்தை மறுத்தல்.

பு. பி. சமுதாயங்களின் பல்வேறு பட்டத் தனித்துவமான வேறுபாடுகளுக்கு மத்தியிலும் மேற்படி அம்சங்கள் பொதுமையாக விளங்கியதை நாம் காண முடியும். சோசலிசக் கட்டுமானம் குறித்த அமைப்பு சார்ந்த மார்க்சியரிடையே நடைபெற்ற விவாதங்களில் கூட முதல் மூன்று அம்சங்களில் கருத்து வேறுபாடு இருந்ததில்லை. மாவோ போன்றவர்கள் கடைசி இரண்டு அம்சங்களில் கருத்து வேறுபட்டனர். மூலதனத் திரட்டல்குறித்தும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மாதிரி குறித்தும் கூட மாவோவுக்குச் சில கருத்து மாறுபாடுகள் உண்டு. கட்சி-முன்னோடிப் படை என்கிற கருத்தாக்கத்தை மறுத்த மாவோ கட்சியையும் மக்களையும் இரட்டை எதிர்வாகப் பார்த்தார். தொடர்ந்து கட்சி மேலாண்மைக்கு எதிரானப் போராட்டங்களை ஊக்குவித்தார் என்ற போதிலும் நடைமுறையில் மூலதனத் திரட்டல் என்கிற ஓரம்சம் தவிர இதர அம்சங்களில் சீனமும் வேறுபடவில்லை. *

மேற்படி அம்சங்கள்அனைத்தும் சோசலிசக் கட்டுமானத்திற்கான சரியான மார்க்சிய வழிமுறைகள் தானா? செவ்வியல் மார்க்சியத்தில் சோசலிசக் கட்டுமானத்திற்கான வேறுசாத்தியக் கூறுகள் ஏதும் தென்படுகின்றனவா? என்கிற கேள்விகள் இப்போதுஎழுகின்றன.இவற்றிற்குப் பதில் தேடுமுன்பாக சோசலிசக் கட்டுமானத்தின் பொதுப்படையான நோக்கங்களாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டவற்றைத் தொகுத்துக் கொள்வோம்.

(அ) நகரம்/கிராமம்; தொழிலாளர்/விவசாயி; மூளையுழைப்பு/ உடலுழைப்பு போன்ற சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்குதல்; கூலிஅளவில் அதிக வேறுபாடு இல்லாதிருத்தல்; சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம் என்கிற நிலையை உருவாக்கு உழைப்புச் சுரண்டலை முடிவுக்குக் கொண்டு வருதல்,

(ஆ) உண்மையான அரசியல் மற்றும் சமூக ஜனநாயகத்தை நிறுவுதல்; சோசலிசப் பண்பாட்டையும்அதனடிப்படையிலான ஒரு புதியமனிதனையும் படைத்தல்.

முதலாவது நோக்கத்தை மரபு மார்க்சியர் ஏற்றுக் கொள்வர். இரண்டாவது நோக்கத்தை வெளிப்படையாக மறுக்க முடியாவிட்டாலும்

---

* பார்க்க: புறப்பாடு-25 ல் வெளியான சமீர் அமீனின் 'மாவோயிசத்தின் எதிர்காலம்' என்கிற நூல் அறிமுகம்.

□□□ அ.மார்க்ஸ்

□ தொடர்—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மறைமுகமாக மறுப்பர். உண்மையான அரசியல் மற்றும் சமூக ஜனநாயகம் என்றெல்லாம் பொத்தாம் பொதுவாகப் பேச முடியாது. வர்க்க அடிப்படையில் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும் எந்த வர்க்கத்திற்கு ஜனநாயகம் என்பதல்லவா முக்கியம்?— என்கிற பாணியில் பேசுவர். பேசுவது மட்டுமல்ல; பு. பி. சமுதாயங்களில் இந்த அடிப்படையில் முதலாளியச் ஜனநாயகம் வழங்கியுள்ள அடிப்படைஉரிமைகளைக் கூட மறுக்கப்பட்டன. பேச்சுரிமை,எழுத்துரிமை, கருத்து வேறுபடும் உரிமை, போராடும் உரிமை, ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை போன்றவை அனைத்துத் தரப்பினருக்குமே மறுக்கப்பட்டன. மரபுவழி மார்க்சியர் வழக்கமாகச் சொல்கிற பா. வ சர்வாதிகாரம் என்றால் பெரும்பான்மையான பாட்டாளிகளுக்குச ஜனநாயகம்; இதர வர்க்கத்தினர் மீது சர்வாதிகாரம் என்கிற வாய்ப்பாட்டை நடைமுறைப் படுத்துவதற்கான நிறுவன வடிவங்கள் எதை ஒட்பழ்ந்யுப் பு. பி.சமுதாயங்களில் சிந்தனையோ முயற்சியோ இல்லை ரோசா போன்றோர் இதனை எப்படி நீங்கள் நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள் என எழுப்பிய ஐயங்களெல்லாம் எள்ளி நகையாடப்பட்டன. பாட்டாளி வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதி- பொதுவுடமைக் கட்சி, அதனிடம் சர்வ அதிகாரங்களும் குவிந்துவிட்டன என்பதேப் பாட்டாளி வர்க்கச் சனநாயகத்திற்கான உத்தரவாதம் என்பதே பதிலாக அமைந்தது.

எனவே இந்த அதிகாரத்தையும், அதிகாரப் பிரயோகத்தில் ஏற்படும் தவறுகளையும் தட்டிக் கேட்பது என்பது பா. வ. சர்வாதிகாரத்தையேக் கேள்விக்குள்ளாக்குவதாகக் கருதப்பட்டது. அப்படிக் கேள்விக்குள்ளாக்கத் துணிபவர் யார்? எதிரி வர்க்கந்தான், எதிரிவர்க்கத்திற்கு இரக்கம் காட்டுவது தேவையா? தேவையில்லை, இந்த விஷயங்களில் இரக்கங் காட்டுவதென்பது பா.வ. அரசைக் கவிழ்த்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் உள்நாட்டு / வெளிநாட்டுச் சக்திகளுக்குத் துணை புரிவதாகவே அமையும். இதைவிட முட்டாள்தனம் ஏதுமிருக்க முடியாது.

கட்சிக்கு வெளியில் மட்டுமல்ல, கட்சிக்குள் கருத்து மாறுபாடுகளை அனுமதிப்பதில்கூட பா.வ. சாதிகாரத்தைப் பலவீனப்படுத்தவே செய்யும் பட்டாளி வர்க்கத்தின் நலன்களையும் தேவைகளையும் பா. வ. கட்சி தீர்மானித்துவிட முடியாதா என்ன, இதற்கெல்லாம் கூட விவாதங்கள் வேண்டுமா? இந்த அடிப்படையில் பத்தாவது காங்கிரசில் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் தடை செய்யப்பட்டன. கட்சி சரியானது. கட்சி எப்போதுமே சரியானது. கட்சியை விட யாரும் சரியாக இருக்க முடியாது. கட்சி தீர்மானிப்பதே உண்மை. உண்மையை அறியக் கட்சியைவிட நமக்கு வேறென்ன வழி இருக்கிறது. என்றெல்லாம் கேட்கப்பட்டது. பாட்டாளி வர்க்கம் ஒருபடித்தானதாக இல்லை; அதனுடைய வளர்ச்சி மட்டம், தேவைகள், ரசனைகள் என்பதெல்லாம் ஒரே மாதிரியாக இருக்க முடியாது என்பன போன்ற உண்மைகள் புறக்கணிக்கப்பட்டன. கட்சியைச் சந்தேகிப்பவன் எதிர்வாக்க ஏஜண்டாக மட்டுமே இருக்க முடியும் என்று நம்பப்பட்டது

சுமார் ஐயாயிரம் ஆண்டு காலமாக வர்க்கச் சமூகத்தின் கருத்தியலால் வளர்க்கப்பட்டவர்கள் மக்கள். அவர்களின் ஓரங்கமான தொழிலாளி வர்க்கத்தற்கு அதிக பட்சம் தொழிற் சங்க உணர்வு மட்டுமே இருக்க முடியும். அனைத்து வர்க்கங்களுக்குமான விடுதலையைச் சாத்தியப் படுத்தும் கடமையுணர்வை பா. வ. உணர்வைக் கட்சியேப் பாட்டாளிகளுக்கு ஊட்ட முடியும்; ஊட்ட வேண்டும். இந்த அறிவையும் உணர்வையும் பா. வ. முன்னோடிப்படையான கட்சி மா. லெ. சிந்தாந்தங்களின் அடிப்படையில் பெறுகிறது. மா. லெ. சித்தாந்தம் என்பது உலகின் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வுகளையும் தன்னகத்துக் கொண்ட ஒரு முழுமையான விஞ்ஞானம். இந்த விஞ்ஞானத்தின் அடிப்படை விதிகளை முன்னோடிப் படை உறுப்பினர்கள் கற்றுத் தெளிய வேண்டும். இந்த விதிகளின் அடிப்படையில் கட்சித் தலைமை மேற்கொள்ளும் முடிவுகளை நடைமுறைப் படுத்துவதும், அவற்றை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதுமே கட்சியின்கீழ்க்கமிட்டிகள் மற்றும் அடிப்படை அணிகளின் ஒரே வேலை. இந்தச் சூழலில் கட்சி அணிகள் கருத்து வேறுபடுவதற்கு என்ன அவசியம். கட்சியின் ஒரு படித்தான குரலைச் சிதைப்பதாகாதா?

நமது எதிரி மிகப்பலமானவன் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் வெளிப்படையாக எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. ரகசியம் மிகவும் அவசியம். மேலே நடக்கிற விவாதங்களும், முடிவெடுக்கும் நடைமுறைகளும் வெளியே தெரிந்துவிடக் கூடாது. மக்களும் இவற்றைத் தெரிந்து கொள்வதில் ஆர்வங்காட்டக் கூடாது. மக்கள் எதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கட்சி தீர்மானிக்கும். பு. பி. சமுதாயங்களில் இவ்வாறு தீர்மானிக்கப்படுபவை மட்டுமே பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் அறிவிக்கப்படும். கட்சியும் அரசும் ஊடுருவ முடியாத இரும்புத் திரையாகவே இருக்க முடியும்.

வளர்ச்சியடைந்த முதலாளியச் சமூகங்களுக்கு இணையாக நமது தொழில் துறையையும் உற்பத்தி சக்திகளையும் வளர்த்தாக வேண்டும். எனவே வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சமமான தொழில் நுட்பத்தையும் அதற்குரிய தொழில் ஒழுங்கமைப்பையும் இங்கே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புகுத்தியாக வேண்டும். இது வெறும் தொழில் நுட்பம் என்கிற அளவில் மட்டுமின்றி தொழில் நிர்வாகம் என்கிற அளவிலும் உள்வாங்கப்படும் போதே வெற்றியடையும். வல்லுனர்களிடமும் மேலாளர்களிடமும் திட்டமிடல் உட்பட அனைத்து அதிகாரங்களையும் அளிப்பது. ஊக்க ஊதியத்தின் அடிப்படையில் தொழிலாளரிடம் வேலை வாங்குவது, லாபத்தை முன் வைத்து உற்பத்தியை ஒழுங்கமைப்பது போன்ற முதலாளிய நடைமுறைகள் பு.பி. சமுதாயங்களிலும் உயிரோடிருந்தன. இதன் விளைவாகத் தொழிலாளி உற்பத்திப் புள்ளியில் அந்நியமாவது தொடர்ந்தது.

மேற்குறித்த நடவடிக்கைகளின் விளையாக உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடமையாக்கப் பட்ட போதிலும் அரசியல் சமத்துவமின்மை கடுமையாக நிலவியது.

அரசு என்பது உதிரும் வரை ஒரு அடக்கு முறைக் கருவியாகவே இருக்கும். இதுவரை அது உடமை வர்க்கங்களின் கையில் இருந்தது. இப்போது அது பா. வர்க்கத்தின் கையில் இருக்கிறது என்பதொன்றே வேறுபாடு. மற்றபடி முதலாளிய அரசு வடிவத்திற்கும் பா. வ அரசு வடிவத்திற்குமிடையே பெரும் வேறுபாடுகள் இருக்க முடியாது. அரசு என்பது மட்டுமல்ல, குடும்பம் உட்பட அனைத்து அதிகார நிறுவனங்களும் பொதுவுடைமைச் சமுதாயம் மலரும் வரை பு. பி. சமுதாயங்களில் முதலாளிய வடிவமைப்புடனேயே கட்டமைக்கப் பட்டிருக்கும். எனவே சோசலிசக் கட்டுமானத்திற்கு தனித்துவமான நிறுவன வடிவங்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை. பு. பி. சமுதாயங்களில் இலக்கியக் கொள்கை; கல்விக் கொள்கை என்பதெல்லாம் வடிவத்தை அப்படியே வைத்துக் கொண்டு உள்ளடக்கங்களை மாற்றினால் போதும் என்பதாகவே இருந்தது. வடிவமும் உள்ளடக்கமும் பரஸ்பரம் ஒன்றையொன்று பாதிக்கும்; வாய்ப்பான சூழல்களில் வடிவமே கூட உள்ளடக்கத்தை மாற்றிவிடும் என்கிற சிந்தனையெல்லாம் புறக்கணிக்கப்பட்டது.

அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுதல், ஒரு கட்சி ஆட்சி, பா.வ.ச. அரசும் ஒரு அடக்கு முறைக் கருவியாகவே இருக்கும் எனகிற கருத்தாக்கம், வர்க்க முரண்களைச் சரியாகக் கையாளாமை ஆகியவற்றின் விளைவாகப் பா.வ.ச, அரசு தனது தொழிலாளி விவசாயி உள்ளடக்கத்தை இழந்தது. ஒரு போலீஸ் எதேச்சாதிகார அரசாக மாறியது. அரசியலை ஆணையில் வைப்பது என்கிற மார்க்சியக் கோட்பாடு ''அரசியல் நிறுவனத்தை'' அதாவது கட்சியை ஆணையில் வைப்பது என்பதாகத் திரிந்தபோது கட்சியும் அரசும் பிரிக்க இயலாததாகியது. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் என்பது 'அதிகாரவர்க்கமயமான மையப்படுத்தப் பட்ட திட்டமிடுதலாக' (அ.மை.தி.) மாறியது. [illegible]

அனைத்திலிருந்தும் மக்கள் குறிப்பாக, அடித்தட்டு மக்கள் அந்நியப் பட்டனர்.

கட்சி / தொழில்நுட்ப / ராணுவ அதிகார வர்க்கங்கள் டதிய ஆளும் வர்க்கமாகின அரசுடமையாக்கப்பட்ட பொதுச் சொத்துக்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமான மக்களின் சமூகமயமான கூட்டுச்சொத்து என்கிற நிலையிலிருந்து வழுவி, வெறும் அரசுச் சொத்தாகவும் அரசு மூலதனமாகவும் மாறின தொழிலாளரும் விவசாயிகளும் அரசுடமையாக்கப்பட்டச் சொத்துக்களின் மீது உண்மையான உடமையாளர்கள் என்கிற உணர்வை இழந்தனர்.

எனவே முதலாளிய நாடுகளில் அடித்தட்டு வர்க்கங்களுக்குக் கிடைக்கும் மாயையான 'சொந்த' உணர்வு கூட பு. பி சமூகங்களிலுள்ள சாதாரண மனிதனுக்குக் கிடைக்காத அவலம் நிகழ்ந்தது. இந்தச் சூழல் சோசலிசம், மார்க்சியம் போன்றவற்றின் மீது ஒரு எதிர்ப்புணர்வையும் அவையல்லாத எல்லாவற்றின் மீதும் ஒரு கவர்ச்சியையும் ஏற்படுத்தியது.

நாம் ஏற்கனவே பலமுறைசுட்டி காட்டியபடி மேற்குறித்தநடவடிக்கை அனைத்திற்கும் ஆதாரங்கள் மார்க்சிய-லெனினியத்திலிருந்தே சுட்டி காட்டப்பட்டன. டெங்கின் ''நான்கு வழிகாட்டும் தத்துவங்கள்'' இதற்கோர் சான்று. இவ்வாறு ஆதாரங்கள் சுட்டிக் காட்டுவதற்கான வாய்ப்புகள் செவ்வியல் மார்க்சியத்தில் இருந்தன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சமூக வளர்ச்சிப் போக்கில் முதலாளியம் என்கிற இடைக் கட்டம் தவிர்க்க இயலாதது; இன்றைய வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளின் மாதிரியைக் கடந்தே இன்றைய பின் தங்கிய நாடுகள் வளர்ந்து வர வேண்டும். உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பது தொழிலாளியை முற்போக்காகப் பார்க்கும் அதே நேரத்தில் விவசாயிகளை உடமை உணர்வுடைய பிற்போக்காளராய்ப் பார்ப்பது என்கிற சிந்தனைகள் மார்க்ஸ்- எங்கல்சிடமே உண்டு என்கிற கருத்து இங்குக் கவனிக்கத்தக்கது.

சுற்றுச் சூழல், இயற்கை வளங்களின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கெல்லாம் உரிய முக்கியத்துவம் அளிக்காமல் முதலாளியக் கட்டுமானங்களில் உள்ளதற்கொப்பக் கனரகத்தொழில்களை உருவாக்குவது என்பதற்கெல்லாம் மார்க்சியத்தையே ஒருவர் ஆதாரம் காட்ட முடியும். பு. பி. சமூகங்களில் இவையே நடைமுறைபடுத்தபட்டன. இந்த வகையில் பு. பி. சமுதாய நிர்மாணிகளாகிய லெனின், ஸ்டாலின், மாவோ, பிரெஷ்னேவ், கோர்ப்பசேவ், போல்பாட், ஹொனேக்கர், ஷிவ்கோ, சீசெஸ்கு வரை ஒரு பாரம்பரியச் தொடர்ச்சியை நாம் காண முடியும் [illegible]லும்போது யாரும் அதிர்ச்சியடைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடாது. மார்க்சும் எங்கல்சும் லெனினும் சிகிச்சைக்காகக் கூட வெளிநாடு செல்ல மறுத்த மாவோவும் கனவு கண்ட புரட்சிகரச் சமூக உருவாக்கம், புதிய பண்பாட்டையும், புதிய மனிதனையும் படைக்கும்முயற்சி ஆகிய வற்றுடன் கூலிப்படைகளையும் உல்லாச வாழ்க் கையையும் அமைத்துக் கொண்ட சீசெங்குவின் நடைமுறைக்குமுள்ள தொடர்ச்சியின்மையைப் போலவே மேற்குறித்தப் பாரம்பரிய தொடர்ச் சியையும் நாம் பார்க்கத்தான் வேண்டியிருக் கிறது. எனினும் லெனின், மாவோ போன்ற மாமேதைகள் தங்கள்வாழ்நாளிலேயே நிகழ்ச்சிப் போக்குகளின் திசையை உணர்ந்து சரியான பாதைக்குத் திரும்பத் துடித்ததற்கு அதிகார வர்க்கமயமாதல் குறித்த லெனினின் கடைசிக் காலக் கருத்துகளும் மாவோவின் கலாச்சாரப் புரட்சி முயற்சியும் சான்றுகள்.

ஜார் காலத்திய கடுமையான ஒடுக்கு முறையின் கீழ் மிகவும் ரகசியமான உருக்குப் போன்ற ஒரு கட்சியைக் கட்டமைக்கும் வரலாற் றுப்பணியை மேற்கொண்டவர் லெனின். முத லாளியம் ஏகாதிபத்தியமாக மாறியதைத் தொடர்ந்து அந்நாடுகளிலுள்ள தொழிலாளர் கள் வர்க்க உணர்வு குறைந்து சீர்திருத்தவாதச் சேற்றில் மூழ்கியிருந்த சூழலில் முன்னோடிப் படையாகப் பா.வ. கட்சியைக் கட்ட வேண்டிய அவசியம் லெனினுக்கு அன்றிருந்தது. மிகவும் பின் தங்கிய பொருளாதாரமும், பற்றாக்குறை யும் மிக்க ஒரு சூழலில் சோசலிசத்தைக் கட்ட மைக்க வேண்டிய அவசியத்தில் சிறையுண்டவர் லெனின். பு.வி. சமூகங்களின் நிறுவன வடிவங் கள் குறித்த ஆய்வுகளில் தன் மேதமையைச் செலவழிக்காத குறையை இறுதிவரை முழுமை யாக அவர் உணர்ந்து கொள்ளாத போதும் அதிகாரமயமாதல் பற்றிய ஆய்வுகளின் அவசி யத்தைக் கண்டு கொண்டவர் அவர். தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்கிற மகத் தான ஜனநாயகக் கொடையை மார்க்சியத்திற்கு வழங்கிய அம்மேதை தன் கண் முன்னாலேயே அது வன்மையாகப் பறிக்கப்படுவதைக் கண்டு துடித்தவர். ஏதேனும் செய்தாக வேண்டும் என இறுதி வரை முயன்றவர்.

எனினும் லெனினுக்குப் பின்னர் இந்தச் சனநாயகக் கரிசனங்கள் எல்லாம் புறந்தள்ளப் பட்டு நாம் முன் குறிப்பிட்ட தவறுகள் அனைத் தும் அதிக அளவில் வளர்ச்சியடைந்தன. மௌனம் அல்லது மரணம் என்பது மனச்சாட்சி யுடையவர்களின் விதியாயிற்று. தொடக்க காலத்திய "நமது அரசு" என்கிற உணர்வும், பாசிசத்திற்கெதிராகக் கட்டவிழ்த்து விடப் பட்டத் தேசிய எழுச்சியும் 1930-40 களில் ரசியா உற்பத்தியிலும், தொழிலிலும், ராணுவத்திலும் இதர ஏகாதிபத்தியங்களுடன் போட்டி போட்டு வளர்ந்து வல்லரசாக உருப்பெறுவதற்குக் காரணமாயின. பாசிசத்திற்கெதிரான அதன் உறுதியான எதிர்ப்பு உலக மக்கள் மத்தியில் அதற்கு மகத்தான செல்வாக்கையும் உலகப் பொதுவுடைமைக் கட்சிகளை வழிநடத்தும் 'தகுதி யை'யும் அளித்தது.

பாசிசத்தின் கொடுங்கரங்கள் அன்று கிழக்கு ஐரோப்பாவைச் சுற்றி வளைத்தபோது அங்கிருந்த முதலாளியக் கட்சிகளும் அரசுகளும் உறுதியாய் நிற்க முடியாமல் சரணடைந்தன; சமரசத்தில் இறங்கின. மகத்தான தியாகங் களின் மத்தியில் ஒரு வலுமிக்க எதிர்ப்பை அங் கிருந்த பொதுவுடைமைக் கட்சிகளே மேற்கொண் டன. எனவே போரின் இறுதியில் ரசியாவால் பாசிசம் வீழ்த்தப்பட்டு மீண்டும் இந்த நாடுகளில் 'சுதந்திர' அரசுகள் உருவாகக்கூடிய சூழல் ஏற்பட்டபோது அவற்றிற்குத் தலைமை தாங் கும் தகுதியையும் வாய்ப்பையும் சமரசம் செய்து கொண்ட முதலாளியக் கட்சிகள் இழந்தன. அது வரைப் பாசிசத்தை வன்மையாக எதிர்த்துநின்ற அந்நாடுகளின் பொதுவுடைக் கட்சிகள் ரசிய ஆதரவோடு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு அன்று ஒரு தர்க்கபூர்வமான நியாயம் இருந்தது.

இதே காலகட்டத்தில் ஸ்டாலினது கொடு மைகள் கொஞ்சம் கொஞ்சமாய் உலகிற்கு வெளிப்படத் தொடங்கியிருந்தன. அதிகாரத் துவமும் அச்சமும் அடிமைத்தனமும் மிகுந்த ஒரு இறுக்கமான சூழல் ரஷியாவில் விளங்கியதைக் கிழக்கு ஐரோப்பிய மக்கள் அறிந்திருந்தனர். இவர்கள் மீது அன்று நிறுவப்பட்டப் பா. வ. ச. அரசுகள் அவற்றின் பாதுகாவலான ரஷிய அரசின் முன்மாதிரியிலேயே கட்டமைக்கப் பட்டன. இவ்வாறு தோன்றும்போதே அதிகார வர்க்கமயமான, அடிப்படை உரிமைகள் மறுக்கப் பட்ட, ஒரு கட்சி ஆட்சி நிலவுகிற சமூகங் களாகவே கிழக்கு ஐரோப்பாவின் பு. பி. சமுதாயங்கள் பிறப்பெடுத்தன. மக்களிடமிருந்து அந்நியமுமாயின. தங்களது பாதுகாப்பிற்கும் ஆதரவிற்கும் ரஷிய அரசையே கிழக்கு ஐரோப்பிய அரசுகள் நம்பியிருக்க வேண்டிய சூழலில் இம்மக்கள் ரசிய ஆதிக்கம் என்கிற உணர்விற்கு ஆட்பட்டு தேசிய உணர்வு வயப் பட்டவர்களாக மாறினர். போலந்து போன்ற நாடுகள் தங்களின் தேசிய அடையாளத்தைக் கத்தோலிக்க மதத்தில் தேடவும் நேர்ந்தது.

இவ் அரசுகள் அனைத்துமே குறிப்பிடத் தக்க அளவிற்கு அடிப்படை வசதிகளை மக்களுக்கு அளித்தபோதும் கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்கப் பொருளா தார வளர்ச்சியைக் காட்டிய போதும், மையப் படுத்தப்பட்ட திட்டமிடுதலின் பயன்களான வேலை இல்லாத் திண்டாட்டமின்மை பணவீக்க மின்மை என்பதெல்லாம் மக்களுக்கு கிடைத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போதும் ரசியா போலவே இங்கும் மக்கள் அந்நியப்பட்டதன் விளைவாகப் போகப் போக இச்சமூகங்கள் அனைத்தும் பல்வேறுவிதமான அரசியல் / பொருளாதார / பண்பாட்டுநெருக்கடி களுக்கு ஆளாயின. அதிகாரவர்க்கமயமான மையப்படுத்தப்பட்டத் திட்டமிடுதலை முழுமை யாகக் கைவிடாமலேயே முதலாளியச் சீர்த் திருத்தங்களை இவ் அரசுகள் மேற்கொண்ட தென்பது நாம் முன் கூறியதுபோல இந்நெருக் கடிகள் முற்றுவதற்குக் காரணமாயிருந்ததே யொழிய இவற்றிலிருந்து விடுபடுவதற்கு வழி சொல்லவில்லை. இந்த நெருக்கடிகளின் உச்ச கட்டத்தைத்தான் 1980களின் இறுதியில் நாம் சந்தித்தோம்,

ஒன்று நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இந்த நெருக்கடிகளுக்கு உள்ளார்ந்த காரணிகள் உள்ளன. தும்பை விட்டுவிட்டு வாலைப்பிடிப் பதைப் போல இந்தக் காரணிகளை விட்டுவிட்டு முதலாளியச் சீர்திருத்தங்களை விடிவாக நினைத்து மயங்கிய போதெல்லாம் தோல்வி களே நிகழ்ந்திருக்கின்றன- இந்த உள்ளார்ந்த காரணிகளைச் கண்டு பிடிப்பதற்குத்தான் நாம் மீண்டும் மார்க்ஸ்-எங்கல்ஸ் தொடங்கி சோச லிசக் கட்டுமானம் தொடர்பாக மார்க்சிய ரிடையே நடைபெற்ற விவாதங்களையெல்லாம் மீண்டும் ஆழமாய்ப் பரிசீலிக்க வேண்டியிருக் கிறது.

(அடுத்த இதழில் நிறைவுறும்)



வக்ரதுண்டர்

## நாளைய உலகு

தெருவெங்கும் தமிழ் முழக்கம்
இங்கோ—
தெருவெங்கும் தமிழர் பிணங்கள்!

□

குண்டு மழை,
குருதி ஆறு,
கெந்தகப் பூக்கள்
கருகிய பிணங்கள்
பாதி—
கருகிய டயர்கள்....

□

பதுங்கு குழிகள்
அடர்ந்த கானகம்
பைன் மரத்து நிழல்
தமிழகச் சிறைகள்
அகதிகள் இருப்பிடம்!

□

சொந்த தேசத்திலும்
புகுந்த தேசத்திலும்
சர்வ தேசமெங்கும்
அகதிகள்....

□

கனவுகளையும் மீறி
இளைஞர்களும் யுவதிகளும்
சிறார்களும் கூடவே
துப்பாக்கி தூக்கிய படிக்கு ....

□

வெற்றியின் மகுடம்
சூடாத படகுக்கு
ஏகாதிபத்தியச் சதிவலைக்குள்
சிந்தனைச் சிறைகள்!


□


தொடர்கின்ற மணிக்கு
நாளைய கரங்களில்
இன்றைய உலகு!

வெளியிடுபவர் : இரா. திராவியம், 25, அருணாசலபுரம் மெயின் ரோடு, அடையாறு, சென்னை-20
அச்சிட்டோர் : ஜே. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ், சென்னை-20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதிவு எண்: T N M S (S) 371

நட்புறவு பாலம்

# கணக்கெடுப்பு

ராஜ-சுந்தரராஜன்

காலைச் சுற்றிய வினாக்களுக்கு
விடை தேடித் தேடியே
என் காலம் கரைகிறது.
தலையைச் சுற்றி மண்டிவிட்ட
ஆசைகளைத் தூசிதட்டித் துலக்கிப் பார்க்க
நேரம் எங்கே வாய்க்கிறது.

வளர்த்துக்கொண்ட சிறகுகளோ
உயரத்தைக் குறிவைக்க
ஒத்துவரவில்லை.
வயிற்றில் அடித்துக்கொள்ள என்றா
வசிக்கவேண்டி வரும்?
மனசு கசக்கிறது.

தொடங்கினது சரிதான்
மனிதமரக் காடுகள் நடுவிலெங்கோ
வழிதவறிப் போனேன்
வாழ்க்கை கசக்கிறது.

